Registered as a Newspaper பக்கங்கள் 10 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 11 (26-11-93) வெள்ளிக்கிழமை ஓசை 281

## சாதாரணதரப் பரீட்சை அனுமதி அட்டைகள்

எதிர்வரும் டிசம்பர் மாதம் ஆறாம் திகதி ஆரம்பமாக இருக்கும் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நேற்று கொழும்பில் இருந்து விமானம் மூலம் பலாலிக்கு எடுத்துவரப்பட்டு யாழ். கல்வித் திணைக்களம் கொண்டுவரப்பட்டன. இவற்றுள் பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை அந்தந்த கோட்டங்களில் பெற்றுக் கொள்ளுமாறும் இதற்கென (2-ம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் எவ்வேளையிலும் இனக்கலவரம் வெடிக்கலாம்!

## தமிழர் மத்தியில் பெரும் பீதி!

(கொழும்பு)

**கொழும்பில் பதற்றநிலை அதிகரித்து வருவதாகவும், தமிழருக்கு எதிரான வன்முறைகள் எந்நேரமும் கட்டவிழ்த்துவிடப் படலாம் எனவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனைத் தொடர்ந்து தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அச்சம் தோன்றியுள்ளதாகவும் அறியவருகின்றது.**

கடந்த சில தினங்களாகக் கொழும்பில் தமிழ் மக்களுக்கெதிரான நடவடிக்கைகளை சிறிலங்காப் பொலிசார் தீவிரப் படுத்தியுள்ளதோடு, கைது செய்யப்படுவோர் தொகையும் அதிகரித்துவருகின்றது.

இதேவேளை, விடுதலைப் புலிகள் கொழும்பிலும், வடக்கு - கிழக்குப் பகுதியிலும் தாக்குதல் நடத்தலாம் என தொடர்ச்சியாக சிறிலங்கா அரசங்கம் அறிவித்துவருகின்றமையும் கொழும்பில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

பூநகரி படைத்தளம் விடுதலைப் புலிகளால் தகர்க்கப் பட்டதைத் தொடர்ந்து சிங்களப் பத்திரிகைகளும், அரசியல் வாதிகளில் ஒரு பகுதியினரும் தமிழருக்கெதிராக தீவிர இனவாதப்பிரசாரத்தைமேற் (2ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தமிழரை காக்குமாறு வெளிநாடுகளிடம் கோரிக்கை

கொழும்பில் தமிழர் மீது தாக்குதல் நடாத்த சில விஷமிகள்திட்டம்தீட்டியுள்ளனர். எனவே வெளிநாட்டுஅரசாங்கங்கள் தலையிட்டு தமிழ் மக்களைக்காப்பாற்ற வேண்டும் என கொழும்பு பிரஜைகள் முன்னணி என்றஅமைப்பு கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதுவராலயங்களை கடிதமூலம் கேட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் மாவீரர் வாரத்தில் அரசுக்கு எதிரான தாக்குதலில் ஈடுபடுவது உண்டு ஆகையால் அதற்குப் பதிலடியாக விஷமிகள் (2ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கொழும்பில் புலிகள் தாக்கலாம் -ரணில்

நவம்பர் 26 ஆம் திகதி பிரபாகரனின் பிறந்தநாள் அன்று புலிகள் தாக்கக்கூடும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

கொழும்பில் இராணுவச் சோதனைச்சாவடிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன முக்கிய மானசந்திகளில் கலகத்தை அடக்கும் படைகள்கண்ணீர்க் குண்டுகள், துப்பாக்கிகள் சகிதம் காணப்படுகின்றனர். கொழும்பில் தமிழர்களுக்கு எதிரானவன்செயல்கள் வெடிக்கலாம் என்பதை எதிர் பார்த்தே இந்தப்பாதுகாப்பு நடவடிக்கை எனத் தெரிவிக் (10ஆம் பக்கம் பார்க்க)

### பரீட்சை நேரஅட்டவணை

டிசம்பர் ஆறாம் திகதி ஆரம்பமாகவுள்ள க பொ.த. (சா/த) பரீட்சை நேரஅட்டவணை 2ஆம் பக்கத்தில்..

பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்



39ஆவது அகவை காணும் தலைவர் பிரபாகரன் அவர்களுக்கு

எமது நல்வாழ்த்துக்கள்

## மாவீரரின் பெற்றோர் இன்று கௌரவிக்கப்படுவர்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் நாளை யொட்டி இன்று மாவீரர்களின் பெற்றோரை கௌரவிக்கும் நிகழ்வுகள் யாழ்மாவட்டத்தில் 16 இடங்களில் இடம்பெறவுள்ளன.

இன்று காலை 9. 30 மணிக்கு ஆரம்பமாக உள்ள இக் கௌரவிப்பு நிகழ்வில் உரைகள், ஒளிப்பட காட்சிகள் கலைநிகழ்ச்சிகள் என்பன நடைபெறவுள்ளன

கௌரவிப்பு நிகழ்வை அடுத்து மாவீரர்களின் பெற் ( 10 ஆம் பக்கம் பார்க்க )

## மாவீரர் நாளான நாளை கோட்டரீதியாக கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

1993 மாவீரர் நாளான நாளை யாழ். மாவட்டத்தில் மூன்று கோட்டங்களிலும் பொதுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப் பொதுக் கூட்டங்கள்;

ஃ வலிகாமம் கோட்டத்தில் அரியாலை காசிப் பிள்ளை அரங்கிலும்,

ஃ வடமராட்சிக் கோட்டத்தில் வதிரி உல்லியன் எல்லை (10ஆம் பக்கம் பார்க்க)

மாவீரர்நாள் நவம்பர்-27

எம் மண் மிதித்த
எதிரியை அழித்து
காத்திடுவோம் தன்மானம்
மீட்டிடுவோம் எம் தாயகம்!

சுன்னாகம் வர்த்தக சங்கம்.

(சி-7972)

## நள்ளிரவு மணிஓசையுடன் மாவீரர் நாள் ஆரம்பிக்கும்!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தேசத்தின் விடிவுக்காய் தம்முயிர் ஈந்த மாவீரர்களை நினைவுகூரும் மாவீரர் நாளை கொண்டாடுவதற்கு தமிழீழ தேசம் தயாராகி விட்டது.

இன்று நள்ளிரவு 12மணி 01 செக்கனுக்குதமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சமகாலத்தில் மணிஓசை ஒலிக்கத் தொடங்குவதுடன் மாவீரர் நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகின்றன. இம்மணி ஓசை 12 மணி 02 நிமிடம் வரை ஒலிக்கும். இந்நேரத்தில் அனைத்து மக்களும் அமைதி வணக்கம் செலுத்துவர்.

நள்ளிரவு 12மணி 02 நிமிடத்திற்கு மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர்களின் நினைவு கல்லறைகளில் மாவீரரின் பெற்றோர் சுடரேற்றுவர். அதேசமயத்தில் இல்லங்கள் தோறும் மக்கள் தீபங்கள் ஏற்றி மாவீரரை நினைவு கூருவர்

நாளைமாலை அணிவகுப்பு நிகழ்ச்சிகளும் பொதுக் கூட் (10ஆம் பக்கம் பார்க்க)

### தமிழீழ மக்களே!

உணர்வாய்,உயிராய் ஒருதற்கொடையாகம்
தினமும்உதிரும் மாவீரர் உயிர்கள் - இவர்
கனவும், நினைவும் மெய்ப்படும் நாளை
-அன்று
நனவாய் மலரும் செந்தமிழ் ஈழம்.

## வரி விளம்பரம்


### உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்க

சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும். (சகல மணிக்கூட்டுப் பற்றறிகளும் எம்மிடம் உண்டு) டில்காவாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (வானவில் கூல்பார் அருகில்) கிளை கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-7848)

### வெளிவருகிறது

11-2-94இல் வாக்கியப்படி விண்ணில் சனி மாற்றம் மண்ணில் உங்கள் யோகபலன் வேலணை சோதிடர் V,A. சிவராசா 152B, அரசடி றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம். (6702)


## 'சாளரம்' வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

நவம்பர், டிசெம்பர் மாத, சாளரம் வெளிவந்துள்ளது இவ் இதழ் ஆசிரியர் தலையங்கம், பல்கலைக்கழக அனுமதியும் தரப்படுத்தலும் எமது இன்றைய பிரச்சினைகளும், அறிவுலகம், இலட்சிய வீரர்கள இறப்பதில்லை, பகலவன் பதில்கள், காந்தரூபன் அறிவுச்சோலை, சமூகவியல் ஓர் அறிமுகம், குடாநாட்டில் தேர்ந்த சில தொல்லியல் மையங்களும் முக்கியத்துவமும் போன்ற அம்சங்களை கொண்டுள்ளது.

## சமூகமளிக்கவும்

நல்லூர்க் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் அனைவரையும் இன்று பி.பி 2.00 மணிக்கு நல்லூர்க் கல்விக் கோட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு கோட்டக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.சி. புலேந்திரன் கேட்டுள்ளார்.

## கொழும்பில்

கொண்டுள்ளனர். இதனைத் தொடர்ந்தும் பதற்றநிலை அதிகரித்தவண்ணமுள்ளது.

இதேவேளை பூநகரிப் படைத் தளத்தில் பெருந் தொகையில் சிப்பாய்களை இழந்துள்ள இராணுவம் தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தலாம் எனவும் அஞ்சப்படுகின்றது.

## சாதாரண

அந்தந்தக் கோட்டத்திற்கு பொறுப்பாகவுள்ள அதிகாரிகள் இன்று யாழ் கல்வித்திணைக்களத்தில் இவற்றை பெற்று பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் இன்று தபாலில் சேர்க்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ் கல்வித்திணைக்கள பரீட்சைப்பகுதி அதிகாரி தெரிவித்தார். (பா)

## கொழும்பில் தமிழரை

கொழும்பில் தமிழர் மீது தாக்குதல் நடத்தலாம் என அம் முன்னணி அச்சம் தெரிவித்துள்ளது.

மேலும் மாவீரர் வாரம் முடிவதற்குள் கொழும்பில் தமிழர் மீது தாக்குதல் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் குழு என்பனவும் எச்சரித்துள்ளன.

## நேர அட்டவணை

### கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சா. தர)ப் பரீட்சை டிசெம்பர் 1993

| திகதி | முற்பகல் | பிற்பகல் |
|---|---|---|
| 1993-12-06<br>திங்கள் | 22 தமிழ் மொழியும் இலக்கியமும் i<br>0830 - 0915<br>22 தமிழ் மொழியும் இலக்கியமும் ii<br>0945—1145 | 22 தமிழ் மொழியும் இலக்கியமும் iii<br>1300-1500 |
| 1993-12-07<br>செவ்வாய் | 31 ஆங்கில மொழி i<br>0830—0930<br>31 ஆங்கில மொழி ii<br>0945—1145 | 12 சைவ சமயம் )<br>13 இந்து சமயம் )<br>1300-1400<br>14 கிறிஸ்தவம் )<br>(றோ. க.) ii<br>15 கிறிஸ்தவம் )<br>1415-1615 |
| 1993-12-08<br>புதன் | 42 கணிதம் ii<br>0830—1130 | 42 கணிதம் i<br>1300-1400<br>92,93, 94 தட்டெழுத்து-i ஆம் தொகுதி 1415-1615 |
| 1993-12-09<br>வியாழன் | 41 விஞ்ஞானம் ii<br>0830—1130 | 41 விஞ்ஞானம் i<br>1300-1400<br>92, 93, 94தட்டெழுத்து-ii ஆம் தொகுதி 1415-1615 |
| 1993-12-10<br>வெள்ளி | 43 வரலாறும் சமூகக் கல்வியும் ii<br>0830—1130 | 43 வரலாறும் சமூகக் கல்வியும் i<br>1330-1430<br>92, 93, 94 தட்டெழுத்து iii ஆம் தொகுதி 1445-1645 |
| 1993-12-11<br>சனி | தொழில் நுட்பப் பாடம் i<br>0830—0930<br>தொழில் நுட்பப் பாடம் ii<br>0930—1130<br>92,93,94 சுருக்கெழுத்து 0900 முதல்<br>91 வர்த்தகமும் கணக்கியலும் ii<br>0830—1130 | 91 வர்த்தகமும் கணக்கியலும் i<br>1300-1400<br>92,93,94 தட்டெழுத்து-iv ஆம் தொகுதி 1415-1615 |
| 1993-12-13<br>திங்கள் | அழகியற்பாடங்கள்<br>51 சித்திரக்கலை i<br>0830—0930<br>51 சித்திரக்கலை iIi<br>1000—1200<br>53 பரத நாட்டியம் i<br>0830—0930<br>55 சங்கீதம் (கர்நாடகம்) ii1000—1200<br>56 சங்கீதம் (மேலைத்தேய) | அழகியற்பாடங்கள்<br>51 சித்திரக்கலை ii<br>1300-1500 |
| 1993-12-14<br>செவ்வாய் | 66 ஆங்கில இலக்கியம்<br>0830-1130<br>இரண்டாம் மொழி<br>64 சிங்களம் i<br>65 தமிழ் i<br>0830—0930<br>64 சிங்களம் ii<br>65 தமிழ் ii<br>0945—1145 | விருப்பத்திற்குரிய ஆங்கிலம்<br>1300-1430 |
| 1993-12-15<br>புதன் | 62 சமஸ்கிருதம்<br>0830—1130<br>விருப்பத்திற்குரிய சிங்களம்/தமிழ்<br>0830—1000 | கனிஷ்ட தொழில் நுட்பச்சான்றிதழ்ப்பரீட்சை (அறிவிக்கப்பட்ட நிலையங்களில் மட்டும்)<br>i ம் பகுதி 1300-1330<br>iiம் பகுதி 1330-1430 |

## பரீட்சை வினாத்தாள்கள் 3ஆம் திகதி வந்து சேரும்

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதம் ஆறாம் திகதி ஆரம்பமாகவுள்ள க. பொ. த (சா / தர) பரீட்சைக்குரிய முதலாம் கட்ட வினாத்தாள்கள் அடுத்த மாதம் மூன்றாம் திகதி யாழ்ப்பாணம் எடுத்துவரப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வினாத்தாள்கள் கொழும்பில் இருந்து விமான மூலம் பலாலிக்கு எடுத்து வரப்பட்டு அங்கிருந்து கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு கொண்டுவரப்பட்டு யாழ். கல்வித்திணைக்களம் வந்து சேருமென தெரியவருகின்றது.

இதற்கான அறிவுறுத்தல் ஒன்று யாழ். கல்வித்திணைக்களத்திற்கு பரீட்சை ஆணையாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரியவருகின்றது (பா)

## றுகுணு தாமதமாகும்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத் துறைமுகத்தில் தற்சமயம் பெய்துவருகின்ற மழைகாரணமாக 'றுகுணு' கப்பல் தாமதித்தே பருத்தித் துறைநோக்கி புறப்படவுள்ளது என சர்வதேச செஞ்சிலுவைச்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.


விதையாகி

## ஒரு வருடமாகிற்றையா .!

முளையாக 04 - 11 - 1972



விதையாக 26 - 11 - 1992

லெப்டினன்ட்

### செங்கண்ணன் (பூவாசம்)

புஷ்பம் இளங்கீரன் - புங்குடுதீவு 4

''சில்லாலைப் பகுதியினிலே சமருமாடிச்
செங்கண்ணா! சிங்களத்துப் பேய்கள்தன்னை
எல்லைவிட்டு விரட்டியிங்கு விதையுமாகி
இன்றோடு ஒருவருடம் ஆகிற்றையா!
நல்லவனே! உன்தந்தை பிறந்த நாட்டில்!
நாங்களுமோ அகதிகளாய் இந்த நாட்டில்!
சொல்லவொண்ணாத் துன்பமடா...... ஈழமொன்றே
துயர்துடைக்கும் என்றுனது நினைவில் வாழ்வோம்''

பெருமையுடன் கண்ணீர் சிந்தும்
உன் பாசமிகு

குடும்பத்தினர்

தற்போதைய. முகவரி:
இல. 111, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (6705)



## நினைவு கூருகின்றோம்.. 1993-11-26

1985ஆம் ஆண்டு மட்டு-இருதயபுரம் பகுதியில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரின் முற்றுகையின் போது சுடப்பட்டு வீரச்சாவெய்திய,

❋ **ராஜா** (வின்சன்ட் - இருதயபுரம் - மட்டு)

1988ஆம் ஆண்டு காரைநகரில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.சூரி** (மகாலிங்கம் சூரியகுமார் - காரைநகர் - யாழ்)

இதே பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய,

**குமார்** (சேகுதாவூது காசீம் - இரத்தினபுரம் - கிளிநொச்சி)

யாழ்-பெரிய கோவிலடியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**பெனி** (ஞானப்பிரகாசம் பெனி - 532, நாவலர்வீதி- யாழ்ப்பாணம்)

வட்டக்கச்சியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஹட்சன் வீதியைச்சேர்ந்த வாய் பேச முடியாத பொதுமகன்.

1989ஆம் ஆண்டு மாதகல் பகுதியில் தேசவிரோதிகள் மீதான தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். வெற்றி** (டேவிற் மரியன் அல்பேட் வின்னர்-சுழிபுரம்-யாழ்)

1991ஆம் ஆண்டு மணலாறு, நெடுங்கேணிபகுதியில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட கைக்குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய,

**சுபாஸ்கரன்/சுபா** (கறுப்பன் கிருஷ்ணலிங்கம்- நெடுங்கேணி-மணலாறு)

1992ஆம் ஆண்டு யாழ்-சில்லாலைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**செங்கண்ணன்-பூவரசன்** (புஸ்பம் இளங்கீரன் -நல்லூர்-புங்குடுதீவு)

சாவகச்சேரி-நுணாவில் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினரின் சுப்பர்சொனிக் விமானமூலம் நடத்திய குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்ட 2பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

❋ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-7993)

# மனிதனைத் தேடும் மனிதன்

**பிரம்மஞானி**

## சென்ற வாரத்தொடர்ச்சி

பாலுணர்வை மையமாக வைத்து சிக்மண்ட்பிரைய்ட் சித்தரித்துக் காட்டும் ஆசை உலகத்தின் (Realm of Desire) நிர்ப்பந்தங்களைப் பார்க்கிலும் மனிதனின் உயிர் வாழ்வை நிர்ணயிக்கும் இன்னொரு உலகமும் இருக்கிறது. அதுதான் தேவை உலகம் (Realm of Needs)

உண்பதற்கு உணவு, உடுத்துவதற்கு உடை, உறங்குவதற்கு உறைவிடம், காலூன்றி நிற்பதற்கு நிலம் என்ற வகையில் நாளாந்த சீவியத்திற்கு ஆதாரமான எண்ணற்ற தேவைகளின் அழுத்தத்தால் மனிதப் பிறவிகள் ஒருவர் ஒருவருடன் இடர்பட்டு, முரண்டு, போராடி வாழும் ஒரு கொடுமையான உலகமாக இந்தத் தேவை உலகம் அசைகிறது.

இந்தத் தேவை உலகத்தில் பசியுணர்வு பிரதானமானது. பாலுணர்வின் உந்துதலை விட பசியுணர்வின் உறுத்துதல் மிசவும் கொடியது. கனவிலோ, கற்பனையிலோ, மனவுலக மருட்சியிலோ பசியுணர்வின் வேட்கையை தணித்துவிட முடியாது.

தினமும் அது என்னை வதைக்கிறது. வாட்டி எடுக்கிறது. எனது மடிக்குள்ளிருந்து நெருப்பாகச் சுடுகிறது. அதன் வேட்கையை தணிக்காது போனால் எனதுவாழ்க்கையே அற்றுப் போகும். உயிரியக்கத்திற்கு அதுதான் எல்லாம். அதற்குப் பின்புதான் மற்றெல்லாம். இந்தப் பூவுலகிலுள்ள கோடானுகோடி வாய்களதும், வயிறுகளதும் வாழ்நிலைத் தவிப்பாக, அன்றாட அவலமாக, பசியுணர்வு பூதாகரத் தோற்றப்பாடு கொள்கிறது. தவிர்க்க முடியாத இந்தத் தேவையின் மையத்திலிருந்தே மனித முனைப்புகளின் அசைவியக்கமாக இருப்பின் சக்கரம் சுழல்கிறது.

மனிதனின் ஆணிவேர் இயற்கையில்ஆழப் பதிந்திருக்கிறது. தனது வயிற்றை நிரப்பிக் கொள்வதிலிருந்து தனது சீவியத்திற்கு ஆதாரமான தேவைகள் அனைத்தையும் இயற்கையிலிருந்தே மனிதன் பெற்றுக் கொள்கிறான். தேவை உலகத்து நிர்ப்பந்தங்கள் மனிதனை இயற்கையோடு பிணைத்து வைத்திருக்கிறது; விலங்கிட்டு வைத்திருக்கிறது. அனந்த காலமாக அகற்ற முடியாத இந்தச் சங்கிலிப் பிணைப்பல் கட்டுண்டு கிடக்கும் மனிதன், இயற்கையோடு போராடி, இயற்கையின் நிர்ப்பந்தப் பிடியிலிருந்து விடுதலைபெ'ற எத்தனித்து வருகிறான். ஒருபுறம் தேவையின் கொடூர நிர்ப்பந்தமும், மறுபுறம் விடுதலையின் உந்துதலுமாக மானிடம் ஒரு சிக்கலான முரண்பாட்டில் சிக்குண்டு கிடக்கிறது.

இந்தத்தேவை உலகத்தின் முரண்பாட்டுக் களத்திலிருந்தே மனிதன் பற்றிய விசாரணையைத் தொடங்குகிறார் கார்ள் மாக்ஸ்.

'எல்லாவற்றிற்கும் முதற்படியாக மனிதர்கள் வாழ வேண்டும். உண்டு, உடுத்தி, உறங்கி, உறவுகொண்டு வாழவேண்டும். வாழும் சூழ்நிலையை முதலில் உருவாக்கிக் கொண்ட பின்புதான் மனிதர்கள் வரலாற்றைப் படைக்கமுடியும். தமது வாழ்நிலைத் தேவைகளைப்பூர்த்திசெய்ய, மனிதர்கள் என்று பொருளுற்பத்தியை ஆரம்பித்தார்களோ, என்று பொருளுலகத்தை படைக்க தொடங்கினார்களோ, அன்றிலிருந்தே மனித வரலாறு ஆரம்பமாகிறது', என்கிறார் மாக்ஸ்.

தேவை உலகத்து அழுத்தத்தால் மனிதனுக்கும் இயற்கைக்கும் மத்தியில் தொடர்ச்சியாக, முடிவில்லாத நிகழ்வுப் போக்காக நடந்துவரும் போராட்டமே உழைப்பு ஆகிறது. இந்த உழைப்பானது மானிடரின் மாபெரும் ஆக்க சக்தியாக, செயற்பாட்டு சக்தியாகப் பொருளுலகத்தைப் படைக்கிறது.

உழைக்கும் மனிதனே இந்தப் பொருளிய உலகத்தின் சிருஷ்டிகர்த்தா. மானிடரின் பொருளிய வரலாற்றைத் தொடக்கி வைப்பவனும் அவனே.

உழைக்கும் மனிதனை மையப் புள்ளியாக வைத்தே கார்ள் மாக்ஸ் தனது சிந்தனைக் கோட்டையைக் கட்டி எழுப்புகிறார்.

உழைக்கும் மனிதன், அவனிடமிருந்து உழைப்பாக வெளிப்பாடு காணும் உழைப்பு சக்தி, அந்த உழைப்பு சக்தியிலிருந்து உருவாக்கம் பெறும் உற்பத்தி உலகம், அந்த உற்பத்தி உலகத்திலிருந்து உருப்பெறும் உற்பத்தி உறவுகள், அந்த உற்பத்தி உறவுகளிலிருந்து தோற்றம் கொள்ளும் வர்க்கப் பிரிவுகள், அந்த வர்க்கங்கள் மத்தியில் முனைப்புறும் முரண்பாடுகள், அந்த முரண்பாடுகளிலிருந்து வெடிக்கும் புரட்சிகள், அந்தப் புரட்சிகளால் தோன்றும் சமூக மாற்றங்கள், அந்த சமூக மாற்றங்களாக அசைந்து செல்லும் வரலாறு- இப்படியாக உழைக்கும் கரங்களிலிருந்து கட்டவிழ்கிறது மனித சரித்திரம்.

மனிதனே பொருளுலகத்தையும் படைக்கிறான்; சமூகத்தையும்படைக்கிறான்; வரலாற்றையும் படைக்கிறான்; தன்னையும் படைக்கிறான். மாக்சிய தரிசனம், மனிதனை, இந்த உலகத்தின் கடவுளாகச் சித்தரிக்கிறது.

இந்த மாமனிதன் தனிமனிதனல்ல, அவன் சமூக மனிதன். சமூக உறவுகளால் உருவாக்கம் பெறும் மனிதன். சமூக உறவுகள் என்ற சிக்கலான சிலந்தி வலைக்குள் சிக்கப் பட்டிருக்கும் மனிதன்.

சமூகம் என்பது தனிமனிதர்களால் அமையப்பெற்ற ஒரு மக்கள் கூட்டம் அல்ல. அன்றி தனிமனிதர்களின் உறவு நிலையையும் அது குறித்து நிற்கவில்லை. சமூகம் என்பது ஒரு கட்டமைப்பாக இயங்குகிறது. பல்வேறு சமூகக் கூறுகள் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக, ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்ததாக, ஒன்றோடு ஒன்று ஆதிக்கம் செலுத்துவதாக, ஒரு முழுமையான கட்டமைப்பாக சமூகம் செயற்படுறது.

இந்தச் சிக்கலான சமூக உறவுகளுக்கு மத்தியில் தனிமனிதன் இருப்புக் கொள்கிறான். தனது இருப்பு நிலையை தனிமனிதன் நிர்ணயித்து விடுவதல்ல. சமூக இயக்கமே தனிமனிதனின்தலைவிதியை நிர்ணயித்து விடுகிறது.

தேவை உலகத்து நிர்ப்பந்தங்கள் ஒரு புறமும், உற்பத்தி உறவுகளின் நிர்ணயசக்திகள் மறுபுறமாக, இயற்கையினதும் சமூகத்தினதும் அழுத்தங்கள் தனிமனிதனின் வாழ்நிலையை நிச்சயித்துவிடுகின்றன.

கார்ள் மாக்சின் புகழ்பெற்ற அறிவியல் ஆய்வு நூலான 'மூலதனம்' முதலாளிய பொருளுற்பத்தி உலகத்தை அறுவை செய்துபார்க்கிறது. முதலாளித்துவத்தின் முரண்பாட்டுக் கோலங்களையும், அதன் அசைவியக்க விதிகளையும் விளக்க முனைகிறது.

'மூலதனத்தில்' திரைநீக்கம் செய்யப்படும் முதலாளிய சமூக அமைப்பில் தனித்துவமான, தனி இயல்புகளுடைய தனிமனிதர்களைக் கண்டு கொள்ள முடியாது. இங்கு தனிமனிதர்கள், பொருளாதாரக் கருத்துருவங்களின்மனித வடிவங்களால்(Personifications of Economic Categories) சித்தரிக்கப்படுகிறார்கள். உற்பத்தி உறவுகளின் சுமைதாங்கிகளாக உருவகம் பெறுகிறார்கள். வர்க்க உறவுகளால் வனையப்பட்ட, வர்க்க நலன்களைப் பிரதிபலிக்கும் வர்க்க மனிதர்களாக இனம் காணப்படுகிறார்கள்.

முதலாளித்துவம் என்ற பொருள் உற்பத்தி நாடகத்தில், முதலாளி என்றும் தொழிலாளி என்றும், விற்பவன் என்றும் வாங்குபவன் என்றும், எண்ணிலாப் பாத்திரங்களைத் தாங்கி மனிதர்கள் மேடையேறுகிறார்கள். அந்தந்தப் பாத்திரங்களை அவனவன் தேர்ந்து கொள்வதல்ல. அந்தந்தப் பாத்திரங்களில் அவனவன் அமர்த்தப்படுகிறான். முதலாளித்துவம் ஒரு ராட்சத இயந்திரமாக, மனிதனுக்குப் புறம்பான ஒரு அசுர சக்தியாக, மனிதனை அடிமை கொள்கிறது. தனிமனிதத்தைச் சிதைத்து விடுகிறது. மனித முகத்தை அழித்துவிடுகிறது.

உழைக்கும் மனிதன், முதலாளிய சந்தையில் ஒரு விலைப்பொருள் ஆகிறான். தனது வயிற்றை நிரப்ப தனது உழைப்பை விற்கிறான். தன்னை விற்கிறான். முதலாளிய ஆதிக்க சக்தி, தொழிலாளியின் ஆக்கசக்தியை விழுங்கிக் கொள்கிறது. அவனது உழைப்பு சக்தியை பிழிந்து எடுக்கிறது. தொழிலாளியின் உதிரத்திலிருந்து முதலாளி உபரி லாபத்தை எடுத்துக் கொள்கிறான்.

உழைக்கும் மனிதன் வியர்வை சிந்தி உழைக்கிறான். அவனது உழைப்பு சக்தி பொருள் வடிவம் எடுக்கிறது. மனிதனின் சாரம் பொருள்களில் பொதிந்து பொருள் மயமாகிறது. உழைப்பில் மனிதன் பொருளாக மாறும் விந்தை ஒன்று நிகழ்கிறது. அந்தப் பொருள்களிலிருந்து பண்ட உலகம் தோன்றுகிறது. உழைப்பு சக்தியால் உருவாக்கம் பெறும் இந்தப் பண்ட உலகம் உழைப்பவனுக்கே அந்நியமானதாக ஒரு புதிரான பொருளுலகமாகத் தோற்றப்பாடு கொள்கிறது. இந்த முதலாளிய பொருளுலகில் உழைக்கும் மனிதன் தனது ஆக்கத்தின் அடையாளத்தை இனம்காண முடியாது. அவனது ஆக்கம், அவனது படைப்பு அவனுக்கே அந்நியமாகி, அவனிடமிருந்து புறம்பாகி, பண்டமாகி, பணமாகி, லாபமாகி, இன்னொருவனின் செல்வமாகி, கூடுவிட்டு கூடு பாய்கிறது. முதலாளிய பொருளுலகில் உழைக்கும் மனிதன் தன்னை இழந்து விடுகிறான். தனது மனிதத்தை இழந்து விடுகிறான்.

முதலாளிய பொருள் உற்பத்தி முறைமையில் மனிதச் சிதைவு (Dehumanisation) நிகழும் சூத்திரத்தை கார்ள் மாக்சின் 'மூலதனம்' பிட்டுக்காட்டுகிறது.

மாக்சிய தரிசனத்தில், சமூகத்திற்கு வெளியாக, சமூக இயக்கத்திற்குப் புறம்பாக மனிதனைக் கண்டு கொள்ள முடியாது. மனித வாழ்வு சமூக வாழ்வாக, சமூக உறவுகளால் பின்னப்பட்ட வாழ்வாக, சமூக முரண்பாடுகளால் சிக்குப்பட்ட வாழ்வாக, சமூக சக்திகளால் நிர்ணயிக்கப்பட்ட வாழ்வாக, சமூக இயக்கத்திற்கு உட்பட்ட வாழ்வாக இயங்குகிறது. தனிமனிதன், தனித்த ஒருவனாக, சமூகத்திற்கு வெளியாக நின்று தனது வாழ்நிலையை நிர்ணயிக்கமுடியாது. சமூகத்தை மாற்றியமைக்காமல் தன்னைமாற்றியமைக்க முடியாது.

சமூகத்திற்கு உள்ளே நின்று, சமூகப் பிறவியாக நின்று, சமூக உறவுகள் ஊடாகவே மனிதன் தன்னை உருவாக்கிக்கொள்ளமுடியும். காலம் காலமாக மனிதன் படைத்த சமூக உலகங்கள் மனித விடுதலைக்கு வழிகோலவில்லை. மனித முரண்பாடுகளைக் களைந்து விடவில்லை. பொருண்மிய சமத்துவத்தை உருவாக்கவில்லை. வரலாற்றுப்பிரக்ஞையின்றி, வரலாற்று அசைவியக்கம் பற்றிய விழிப்புணர்வின்றி, மனிதன் வரலாற்றைப் படைத்திருக்கிறான். வரலாற்றைப் படைக்கும் சக்தியாகிய உழைக்கும் மனிதன், ஒடுக்கப்பட்டு, சுரண்டப்பட்டு, அடிமைப்படும் மனிதன், முதலாளித்துவத்தின் இரும்புப் பாதங்களால் மனித சருகுகளாக மிதிபடும் பாட்டாளி வர்க்க மனிதன், சுயவிழிப்புணர்வோடு, வரலாற்றுப் பிரக்ஞையோடு, வரலாற்றைப் படைக்க வேண்டும். அந்த வரலாற்றுப் படைப்பாக உருவாக்கம் பெறும் புதிய சமூகத்தில், பொருளியப் பொதுமை நிலவும் அந்த சமத்துவ சமூகத்தில், யுகம் யுகமாக மனிதர்கள் மத்தியில் நிலவிவந்த முரண்பாடுகள் நீங்கிய சூழலில 'சோசலிச மனிதன்' பிறப்பெடுப்பான். ஒரு புதிய யுகத்தின் புதிய மனிதனாக 'சோசலிச மனிதன்' திகழ்வான். அகத்திலும் புறத்திலும் விடுதலை பெற்றவனாக, தனது ஆக்க சக்திக்கு ஆக்க பூர்வ வெளிப்பாடு காண்பவனாக, முழு மனிதனாக, அவன் உருவாக்கம் பெறுவான். இந்த 'சோசலிச மனிதனின்' பிறப்புடன், வர்க்க முரண்பாட்டில் சுழலும் வரலாற்றுச் சக்கரம் தனது அசைவியக்கத்தை நிறுத்திக் கொள்ளும்.

முதலாளித்துவத்தின்கொடுமையை வெறுத்து, முழு மனித விடுதலையை விரும்பிய கார்ள் மாக்ஸ், இப்படியாக ஒரு தீர்க்க தரிசனம் சொன்னார்.

சோசலிச மனிதன் பிறப்பு எடுத்தானா? பொதுமையின் சமத்துவம் புது மனிதனை, முழு மனிதனை தோற்றுவித்ததா? கார்ள் மாக்ஸ் கண்ட கனவு நிறைவு பெற்றதா? என்ற கேள்விகள் பற்றி பிறிதொரு கட்டுரையில் பார்ப்போம். இங்கு இது ஆய்வுப்பொருள் அல்ல.

கார்ள் மாக்ஸ் கனவு கண்ட மனிதன் வேறு, கண்டு கொண்ட மனிதன் வேறு. அவர் கண்டு கொண்ட மனிதன் பற்றியே நாம்இங்கு கவனம் செலுத்துகிறோம்.

'மனிதன் யார்'? என்ற கேள்விக்கு மாக்சியத்தில் விடைகாண முடியாது என்பது சில நவமாக்சிய தத்துவாசிரியர்களின் கருத்து. மாக்சியமானது சமூக உறவுகள் பற்றியும், சமூக அசைவியக்கம் பற்றியும், சமூக வரலாறு பற்றியும் ஆழமாகப் பார்க்கிறதே தவிர மனிதம் பற்றியோ, மனிதன் பற்றியோ தேடுதலை நடத்தவில்லை என்பது இவர்களது வாதம். இந்தக் கருத்தை முன்வைப்பவர்களில் அல்தூசர் முக்கியமானவர்.

கார்ள் மாக்சின் சிந்தனை உலகை இரு கூறுகளாக வகுத்துக் காட்ட முனைகிறார் அல்தூசர். ஒன்று இளம்பராய தத்துவார்த்த எழுத்துக்கள். மற்றது, முதிர்ந்த மாக்சின் 'மூலதனம்'. இளம்பராய எழுத்துக்கள் தத்துவக் கருத்துநிலை சார்ந்தவை என்பதும், 'மூலதனம்' அறிவியற்கோட்பாடுகளைக்கொண்ட வரலாற்று விஞ்ஞானமாக அமையப் பெற்றிருக்கிறது என்பதும்அவரது கருத்து. இளம்பராய தத்துவ எழுத்துக்களில் மனிதத்துவம் பற்றி (Humanism) மாக்ஸ் கூறியவை எல்லாம் கருத்து நிலை சார்ந்த சித்தாந்தவாதம் என ஒதுக்கிவிடும் அவர், மூலதனத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்.

மாக்சின் சிந்தனை உலகை, சித்தாந்தம் என்றும் விஞ்ஞானம் என்றும் இரு வகைப்படுத்தி மனிதத்துவத்திற்கு சாவுமணி அடிக்கும் அல்தூசரின் வாதத்தை நிராகரிப்பவர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். மாக்சின் எழுத்துக்களில் ஒருதொடர்ச்சியான படிநிலை வளர்ச்சி இருக்கிறது என்பதும் முதிர்ந்த வயதில் நிகழ்ந்த சிந்தனை முறிவு (Epistemological Break) என்ற அல்தூசரின் கருத்து தவறானது என்பதும் இவர்களது நிலைப்பாடு. மாக்சின் தத்துவார்த்த எழுத்துக்கள் முற்று முழுதாக மனிதத்துவம் பற்றியே குறிப்பிடுகிறது என்பதும் 'மூலதனத்திலும்' முதலாளித்துவத்திற்கு எதி

(5 ஆம் பக்கம் பார்க்க)

# மீண்டும் கொந்தளிக்கும் எல்சல்வடோர்

பாலகுமாரன்

அன்றைய தினத்தை மிகஉன்னதமானதாகஎல்சல்வடோர் மக்கள் கருதினார்கள். அதனால் ஆடிப்பாடினார்கள்; அடிக்கடி ஆனந்தக் கண்ணீர் வேறு சொரிந்தார்கள்; எல்சல்வடோரின் தலைநகரான சான் சல்வடோரின் பிரதான தேவாலய முன்றலிலே பொது மக்கள், போராளிகள், கிறித்தவ குருமார், ஆட்சியாளர், இராணுவத்தினர் என பல தரப்பாரும் ஒன்றுகூடினர் இக்காட்சி எல்சல்வடோரில் மட்டுமல்ல உலக வரலாற்றிலேயே அரிதாக தோன்றும் காட்சி. ஏனென்றால் 12 வருடத்திற்கு மேலாக மிகக் கொடிய இராணுவ கொடுங்கோன்மையை நடாத்தி இரகசிய கொலைக் குழுக்கள் மூலம் குருதியை உறைய வைக்கும் கொலைகளை நடாத்தியோரும் அங்கிருந்தனர்; அதற்கு எதிராக தீவிரமாக போராடிய போராளிகள் அங்கிருந்தனர்; அப போராட்டத்திற்கு ஆதரவாக வழமையான சம்பிரதாயமான மதச்சடங்குகள், செயற்பாடுகட்கு அப்பால் சென்று துயரப்படும் மக்களின் கண்ணீரைத் துடைக்க முன்வந்த போராளிகட்கு ஆதரவாக செயற்பட்ட கிறித்தவ மதகுருமாரும் அங்கிருந்தனர். எனவே இத்தகைய காட்சி எவரையும் உணர்ச்சிவசப்பட வைத்ததில் வியப்பில்லை ஐ. நாவாலும், அமெரிக்காவாலும், லத்தீன் அமெரிக்க நாடுகள் பலவாலும், கிறித்தவ மதபீடத்தினராலும் ஏற்படுத்தப்பட்ட அமைதி உடன்பாட்டின் தொடக்க நாள் விழா அது. அதற்கு முன்னர்தான் நிரந்தர போர் நிறுத்தத்தை குறிக்கும் முகமாக ''அமைதியை நிலை நிறுத்துவதற்கான தேசிய ஆணைக்குழு'' உருவாக்கப்பட்டிருந்தது. 75,000 பேருக்கு மேல் காவு கொண்ட உள் நாட்டுப் போரொன்றின் முடிவினைக் குறிக்கும் நாளாக அது கருதப்பட்டது.

இந்த நிகழ்வின்இன்னொரு சிறப்பு அமிசமாக உள் நாட்டுப்போர் தொடங்கிய போதும் முடிந்த போதும் கொல்லப்பட்ட இருவரின் மனைவியரும் சோகத்துடன் அங்கு இருந்தமை கருதப்பட்டது. பல்லாயிரக் கணக்கில் திரண்டிருந்த மக்கள் கையிலே செந்நிறக் கொடிகள் அசைந்தாடின. அவை எல்சல்வடோரின் தேசிய விடுதலை அமைப்பானF.M.L.Nஎனப்படும்பாரபுண்டே மார்ட்டி தேசிய விடுதலை முன்னணியின் கொடியாகும். Farabundo Marti National Liberation Front) மேடையிலே இயக்கத் தலைவர் யோகுவின் வில்லாலோபோசும் (Joagain Villalobos) இராணுவ உயர் பீடமும் ஒன்றாக இருப்பது கண்டு மக்கள் புன்சிரிப்புக் காட்டினர். இயக்கத் தலைவர் அங்கு பேசும் போது பரந்து பட்ட மக்கள் அடித்தளத்தைக் கொண்ட பன்மைத் தன்மை கொண்ட கட்சியொன்றை கட்டவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். அதற்கு முன்னர் அவர் அதேதினம் ஆனால் 60 ஆண்டுகட்கு முன் கொல்லப்பட்ட தேசியவீரன் பாரபுண்டோ மாட்டியினதும் 1980களில் கொலைக்குழு ஒன்றால் சுட்டுக் கொல்லப்பட்ட அதி மேற்றிராணியார் ஒஸ்கார்றொமோராவினதும் (Arch bishop Oscar Romero) நினைவுத் தூபிகட்கு சென்று வணங்கினர். அதுமட்டுமன்றி போராட்டத்தின் போதும் பின்னர் அமைதி உடன்பாடு ஏற்படுவதற்காகவும் மனப்பூர்வமாக உழைத்த கத்தோலிக்க மத உயர் குருவானோரை வணங்கி கட்டித் தழுவி தமது நன்றியறிதலைத் தெரிவித்தார். அப்போது இரு தரப்பிலுமே வழிந்த கண்ணீர் எல்சல்வடோர் மக்கள் பட்ட துயரை பிரதி பலித்தது. இவ்வாறாக அன்றைய தினம் மறக்க முடியாதாயிற்று.இது நடந்தது இன்று நேற்றல்ல 1992ஆம் ஆண்டின் முற்பகுதியிலாகும்.

ஆனால் அண்மைக்காலமாக எல்சல்வடோரில் உருவாகிவரும் சூழ் நிலைகள் இம் மகிழ்ச்சி நீடிக்குமா என்கின்ற கேள்வியை கிளப்பிவிட்டுள்ளது. ஏனெனில் தற்போது எல்சல்வடோரில் சனாதிபதியாக உள்ள அல்பிரடோ கிறிஸ்டியானி (Al Fredo Cristiani) அரினா (Arena) எனப்படும் ஆறாம் குடியரசு தேசியக் கூட்டணிக் கட்சியை சேர்ந்தவர்.

இக்கட்சியை உருவாக்கியவரும் எல்சல்வடோர் வரலாற்றிலே பெரும் கொடுமைகளை கட்டவிழ்த்து விட்டவருமான (Robento Aubuisson) றொபேர்ட்டோ அயுபிசோன் மோசமான கொலைக்குழுக்களை இராணுவ உதவியோடு உருவாக்கியகொலைக்காறன் ஆவான். எனவே அமைதி உடன்பாட்டின்படி இவ்வாறான இராணுவ அதிகாரிகள் பலர் பதவி விலக்கப்பட வேண்டும்.ஆனால் இப்போது கிறிஸ்டியானி தயங்குகிறார். அதுமட்டுமன்றிமீண்டும்வலதுசாரி கொலைக் குழுக்கள் இப்போது இயங்கத் தொடங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது. கொலைக் குழுக்கள் தொடர்பாக அமைதி உடன்பாட்டின்படி விசாரணை மேற்கொண்ட ஐ.நாவின்அறிக்கை இப்போது வெளியாகி பெரும் உணர்வலைகளை ஏற்படுத்துகின்றது. இராணுவத்தின்மீதே பல கொலைகட்கு குற்றம் சுமத்தப்பட்டு தற்போது உயர் பதவி வகிக்கும் 40 அதிகாரிகள் உடனடியாக நீக்கம் செய்யப்பட வேண்டுமென ஐ. நா பரிந்துரைத்துள்ளது. அது மட்டுமன்றி ஆர்ச்பிசம் றொமேறாவின் கொலைக்கு Aubuisson நேரடிப்பொறுப்புஎன்றும்ஐ.நாகுற்றம் சாட்டியுள்ளது. ஐ. நாவின் அறிக்கை இராணுவத்திற்குள்ளே பெரும் கொந்தளிப்புகளை உருவாக்கியிருப்பதாகவும் உடன்பாட்டின்படி 40 இராணுவ அதிகாரிகளை பதவி நீக்கம் செய்யமுடியாமல் சனாதிபதி திண்டாடுவதாகவும் தெரிகின்றது. அது மட்டுமன்றி மீண்டும் கொலைக் குழுக்கள் தமது கைவரிசையை காட்டத் தொடங்கிவிட்டன.இப்போது பலியாவோர் ஆயுதத்தை கையளித்து அமைதி வாழ்வில் தமது குடும்பத் தாரோடுசேர்ந்துகட்சிப் பணிகளில் ஈடுபடும் (F.M.L.N) போராளிகள் மிக அண்மையில் தலைவரின் முன்னாள் பாதுகாவலர் கொல்லப்பட்டு குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டிருந்தார். இதனால் எல்சல்வடோர் குறித்து மீண்டும் கவலை எழத் தொடங்கிவிட்டது. கிறிஸ்டியானி இப்போது அமெரிக்காதனது அரசுக்கு குழிபறிப்பதாக குற்றம் சாட்டுகிறார். ஏனென்றால் மனித உரிமைகள் பற்றி கனவான் போல பேசும் அமெரிக்கா எல்சல்வடோர் குறித்தான தனது முன்னைய கறைகளை மறைக்க பெரும் அழுத்தத்தை இப்போது கிறிஸ்டியானி மீதே அழுத்துகிறது. ஆனால் முன்னர் அமெரிக்கா என்ன செய்தது என்பதும் அதன் விளைவே இன்றைய நிலை என்பதை ஒரு தடவை நினைவூட்டுதல் கடமையாகிறது.

எல்லா தென்னமெரிக்க நாடுகளைப் போலவே எல்சல்வடோரும், அமெரிக்க முதலாளிய நலன் கட்காக தொடக்கத்திலிருந்தே பலிக் கடாவாக்கப்பட்ட்து. 100 ஆண்டுகட்கு மேலாக 14குடும்பங்கள அங்கு தமது குடும்ப ஆட்சியை இராணுவ வல்லாண்மையில் நடாத்தின. கோப்பி, சீனி பெரும் தோட்டங்களிலே நிலமற்ற கூலி விவசாயிகள் கொடுமையாக உழைக்க வைக்கப்பட்டனர். வேறு வழியில்லாது கிளர்ச்சிகள் செய்த போது கால்நடைகள் போல் மக்கள் கொல்லப்பட்டனர். இவ்வாறாக 1972ஆம் ஆண்டு விவசாயிகள் மேற்கொண்ட கிளர்ச்சி 30,000 பேரைக் கொன்றதன் மூலமே நிலவுடைமை வருக்கத்தால் அடக்கப்பட்டது. எனினும் காலமாறுதல்கட்கு ஏற்ப 1970களில் மாற்றங்கள் சிலதை முதலாளிய நலன்களை பாதுகாப்பதற்காக அமெரிக்கா கொண்டு வர முயற்சித்தது. ஏனென்றால் வறுமையில் வாடும் மக்களை முன்னிறுத்தி போராட்ட அணியாக்கி புரட்சிகர விடுதலை சக்திகள் அங்கு 1970களில் தோற்றம் பெறத் தொடங்கின. அதுமட்டுமன்றி மாக்சியக் கருத்துகள் ஒருபுறம்; தீவிரத் தன்மை வாய்ந்த கிறித்தவ மத விடுதலைக் கருத்துக்களும் மக்களிடம் பரவவே மத்திய அமெரிக்காவை கம்யூனிஸ்ட் பூதங்கள் விழுங்கப் போவதாக கூறி பெரும் அடக்குமுறைகள் தொடர்ந்தும் கட்டவிழ்த்து விடப்பட்டன.

நிலவுடைமை வருக்கத்தால் தமது வருக்க எதிரிகளை அழிப்பதற்காக உருவாக்கப்பட்ட ORDEN எனப்படும்கொலைக் குழுக்கள் பின்வரும் தமது பணியை தொடரலாயின.

அமெரிக்க அழுத்தத்தால் 1972, 1979, களில் நடந்த தேர்தல்களில் மோசடிகள் நடைபெற்றன. இதை அமெரிக்காவால் தடுக்க முடியவில்லை. 1972 தேர்தலில் கேணல் மொகனாவும் 1979 தேர்தலில் ஜெனறல் கார்யோய்றொ மேராவும் இவ்வாறு பதவியைப் பிடித்தனர் இவர்கள் அமெரிக்க சனநாயகத்தை சிரிக்க வைத்ததன் காரணமாக அப்போதைய சனாதிபதி கார்டரின் அனுசரணையோடு 1979 பிற்பகுதியில்அங்குள்ளஇராணுவ நிலவுடைமைஆட்சி கலைக்கப்பட்டு குடி மக்களையும் இராணுவத்தையும் கொண்ட Junta குழுவொன்று பதவியேற்றது. இதுவும் இறுதியில் பெரும் கண்துடைப்பாயிற்று. அமெரிக்க ஆதரவோடு வலதுசாரி முதலாளி கட்சியாக உருவெடுத்த கிறித்தவ சனநாயக கட்சியை சார்ந்த Jose Napoleon Duarte இறுதியில் சர்வாதிகாரியாக வழிவகுக்கப்பட்டது. பெரும் அடக்குமுறைகளை நெஞ்சத்தை அதிர வைக்கும் கொலைக் குழுக்களின் படுகொலைகளை இவ்வாட்சியும் தொடர்ந்தது. மத்திய அமெரிக்காவை தன் வசமாக்க முயலும் கம்யூனிஷ் பிசாசுக்கு எதிராக எல்சல்வடோர் போராடுவதாக கூறி அமெரிக்கா இராணுவ நிதி உதவிகளை வாரிவழங்கியது இதனால் வரலாறு காணாத அடக்குமுறைகளை 1980 பின் எல்சல்வடோர் சந்தித்தது. இவ் அடக்குமுறைக்கு மாற்றாக FMLN அமைப்பு தனது தீவிரம் மிகுந்த இராணுவத் தாக்குதல்மூலம் வேகமாக வளர்ச்சிபெற்று நாட்டின் பல பாகங்களை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது இவ்வாறாக போராட்டம் நீண்டது.

இப் போராட்டவரலாற்று காலகட்டத்தில் இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விடயம் கிறித்தவ மத குருமாரின் பெரும் பங்களிப்பேயாகும். 1960களின் முன் கிறித்தவ மதபீடம் வழமையாக ஆட்சியாளருக்கு ஆதரவாக கிளர்ச்சி எடுத்துக் கொள்ளும் மக்களை மழுங்கடிக்கும் பணியிலே ஈடுபட்டிருந்தது. ஆனால் குறிப்பாக 1970களின் பின் நாட்டு நிலைமைகள் மிக மோசமாகியபின் மதகுருமார் நேரடியாக மக்கள் துயர்துடைக்க முன்வந்தனர். அடக்கு முறைகட்கு எதிராககுரல் கொடுத்தனர் யேசு சபையைச் Jesuits சார்ந்த குருமார் கிராமப் புறங்களில் வறுமையில் வாடும் மக்களோடு வாழ்ந்து அவர்களை விழிப்புணர்வு உள்ளவர்களாக்கிபோராட்ட அமைப்புக்களை உருவாக்கினர். பலன் -இவர்களும் ஆட்சியாளரின் கொலைக்குழுக்களின் அட்டூழியங்கட்கு இரையாகினர் உலகிலே எங்கும் காண முடியாத கொடிய அடக்குமுறைகள் இவர்கள் மீது ஏவப்பட்டன. வருக்கப் போராட்டத்தை முன்னெடுக்க முயல்வோர் என இவர்கள்அரசால் வருணிக்கப்பட்டனர் கொலைக் குழுக்கள் இவர்களை இராணுவ இலக்குகள் ஆக்கின. இணை மேற்றிராணியார் உட்பட பலர் தலைமறைவாக நேரிட்டது. தேவாலயங்கள் தாக்கிதகர்க்கப்பட்டன. ஆறு தடவைகள் சான் சல்வடோரில் உள்ளயேசு பல்கலைக்கழகம் குண்டுவீசி தாக்கப்பட்டது. வலதுசாரி கொலைக் குழுக்கள் ''மதகுருமாரை கொல் தேசபக்தனாகு'' Beaptriot Ki llO priest என்ற கோசங்கள் முன் வைக்கப்பட்டன. இவைஎல்லாவற்றின் உச்சமாக கிறித்தவ குருமார் குருதிபாய கொல்லப்பட்டனர் இவ்வாறு நடந்த படுகொலைகளில் வறுமையில் வாடிய மக்களோடு வாழ்ந்து போராடிய ருட்டிலோ அடிகளார் Fr Rutilio அல்போன் சோநவாறே' Alfonsonavao அடிகளின் கொலைகள் உலகையே அதிரவைத்தன. ஈற்றில் 1980-ம் ஆண்டு மார்ச் 24ஆம் திகதி அதிமேற்றிராணியார் ஒஸ்கார் றொமோரோ தேவாலயத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். (Archbishop Oscar Romeroon) அதற்கு முன்தினம் தான் இவர் ஒடுக்குமுறையை மேற்கொள்ளும் காவல்துறையையும், இராணுவத்தையும் தமது ஆயுதங்களைக் கைவிடுமாறு பகிரங்க அழைப்பு விடுத்திருந்தார். இவரின் மறைவு என்றும் உலகின் மனச்சான்றினை உறுத்தியவண்ணம் இருக்கும். அநீதிக்கு எதிராக போராடிய உண்மையான யேசுவின் சீடனாக அவர் மரணித்தார். இக் கொலையினால் அமெரிக்க மக்கள் அதிர்ந்து போயினர். தனது கொள்கையை மாற்ற அமெரிக்க அரசு நிர்ப்பந்திக்கப்பட்டது. இவ்வாறாக சோவியத் வீழ்ச்சியின் பின் பலருடைய முயற்சியின் விளைவாக போராளிகட்கும் ஆட்சியாளர்களுக்கும் நேரடிப் பேச்சுக்களில் ஐ. நாவின் முகதாவில் ஈடுபட்டு அமைதி உடன்பாட்டை எட்டினர்.

உடன்பாட்டின்படி அடுத்த வருடம் 1994 மார்ச் மாதம் பொதுத்தேர்தல்நடாத்த படவேண்டும். (F.M.L.N)போராளிகளையும் முன்னாள் இராணுவவீரர்களையும் கொண்டு காவல் துறை அணியொன்று உருவாக்கப்பட்டு விட்டது. ஆனால் எல்சல்வடோர் இராணுவம் இன்னமும் மாற்றங்கட்கு பெரும் தடையாக உள்ளது. அமெரிக்க காங்கிரசோ இராணுவ உதவிகள் யாவற்றையும் நிறுத்தி இராணுவத்தின் மீது குடிமக்கள் ஆணையை நிலை நிறுத்துமாறு வலுயுறுத்துகின்றது. F.M.L.N போராளிகள் பெருமளவு ஆயுதத்தை கையளித்த நிலையில் பொறுமையோடு காத்திருக்கிறார்கள்..எல்சல்வடோர் மக்களோ அமைதி கலையுமோ எனஏங்குகிறார்கள். உலகிற்கு முன்னோடியானபூரணமானஅமைதிஉடன்பாடாக சித்தரிக்கப்பட்ட இவ்வுடன்பாட்டின் எதிர்காலம் பல வரலாற்றுன்மைகளை வெளிப்படுத்தக் கூடும் பெரும் பூதம் போல வளர்ந்த இராணுவத்தை கட்டுப் படுத்துவது எவ்வாறு என எவர்க்கும் தெரியவில்லை இவ்வாறாக எல்சல்வடோரின் எதிர்காலம் கேள்விக் குறியாக மாறும் இந்நிலையில் மறைந்த அதிமேற்றிராணியார் கூறிய கூற்றொன்றை இங்கு நாம் மனம் கொள்ளல் அவசியமாகின்றது. 1978ம் ஆண்டு அவரால் கூறப்பட்ட கூற்று '' எப்போது ஒரு சர்வாதிகார ஆட்சி 'தேசத்தின் மனிதத்தை அழிக்க முற்படுகின்றதோ எப்போது புரிந்துணர் விற்கும் பேச்சுவார்த்தைக்குமான பகுத்தறிவின் சகல வழிகளும் மூடப்படுகின்றதோ எப்போது அடக்குமுறைகள் தாங்கமுடியாததாகின்றதோ அப்போது இவைக்கு எதிராக கிளர்ந்தெழுந்து வன்முறை தழுவி போராட மக்கள் இயல்பான உரிமை உடையவர் ஆகிறார்கள் என்பதை திருச்சபை சொல்லித்தான் ஆகவேண்டும்.''

இக்கூற்று ஒடுக்கு முறைகட்கு எதிராக போராடுவோர் அனைவர்க்கும் எங்கும் என்றும் பொருந்தும் அல்லவா?

> ''எப்போது ஒரு சர்வாதிகார ஆட்சி மனித உரிமைகளை மீறி தேசத்தின் பொது மனிதத்தை அழிக்க முற்படுகின்றதோ எப்போது புரிந்துணர்விற்கும் பேச்சுவார்த்தைக்குமான பகுத்தறிவின் சகல வழிகளும் மூடப்படுகின்றதோ எப்போது அடக்கு முறைகள் தாங்க முடியாதது ஆகிறதோ அப்போது அவற்றிற்கு எதிராக கிளர்ந்தெழுந்து வன்முறை தழுவி போராட (Insurrectional Violence) மக்கள் இயல்பான உரிமை உடையவர் என்பதை திருச்சபை சொல்லித்தான் ஆகவேண்டும்''
>
> அதிமேற்றிராணியார் ஒஸ்கார்றொமேரோ
>
> Archbishop Oscar Romero 1978

## சிறுகதை

# தாயகக் கனவு

## செ. மதியழகன்

கொழும்பு மா நகரம்! இரவின் கொடிய இருளினால் அமைதியாகக் கிடந்தகொழும்பு நகர், மீண்டும் புத்துயிர் பெறுவது போன்று களை கட்ட ஆரம்பமாகியது. எங்கும் ஒரே இரைச்சல் சத்தம் தான். வானிலே படர்ந்திருந்தபனிப்படலத்தைகிழித்துக் கொண்டு ''எயார் லங்கா'' விமானம் பேரிரைச்சலோடு புறப்பட்டுக் கொண்டிருந்தது. இன்றும் எத்தனைபேர் எமது தாயக மண்ணை மறந்து, சொந்த நல்வாழ்வுக்காகவும்,சொத்து சுகங்களுக்காகவும் நாளை வந்து நாட்டில் நல்ல வசதியாக வாழ வேண்டும் என்பதற்காகவும் இந்த விமானத்திலே தங்களையே மறந்து பயணத்தில் பறந்து கொண்டிருக்கிறார்களே?

அப்படியானால் நான்?.. என்ற அரவிந்தனின் கொடிய பெரு மூச்சு சற்று முன்னர், அவனால் அகற்றப்பட்ட யன்னல்திரையினைஓர் உலுப்பு உலுப்பியது.ஆழ்ந்த சிந்தனையில் மிதக்கின்றான். தாய் மண்ணை மறந்து அன்னிய நாட்டிற்கு எனது பயணத்தை தொடர்வதா?...... அது எப்போது சாத்தியமாகும். அல்லது அன்னிய தேசத்தை மறந்து சொந்த மண்ணிற்காய் குருதி கொட்டுவதா? அப்படியானால்?... என்றும் வறுமையால் அடுப்பின் அருகில் இருந்து ''ஊது குழல்'' பிடித்து ஓடாய் போன என் தாய் . !நாற்புறமும் பிய்ந்து ஈர்க்கில்களும், மட்டைகளும் தூங்கும் எனது சிறிய குடிசை!... நான் தொடரவிருக்கும் வெளிநாட்டுப் பயணத்திலே தன் எதிர்காலப் பயணத்தை நினைந்து ஏங்கிய வண்ணம் இருக்கும் அக்கா?...

எனது வெளிநாட்டுப் பயணத்திற்காய் தனது ஒரேயொரு சொத்தாக விருந்த காதணியைக் கழற்றி தந்த தனது உறவுச் சகோதரியையும், தாயையும் நினைந்து அவன் வாய்விட்டு அழாத இரவுகளே கிடையாது.

தன்னையே நினைந்து காதிலேயேஒரு குச்சுக்கூட இல்லா மல்வாசற்படிகளிலே நாடிக்கு கைகொடுத்த வண்ணம் இருக்கும் வானதியை நினைத்தவுடன் அவனுக்கு தலை சுற்றுவது போலிருந்தது. இவை அனைத்தையும் நினைத்துத் தான் தீர்க்கமான முடிவின் பின் வெளிநாட்டுப் பயணத்திற்காய் இன்று ''ஐலன் லொச்சில்'' அறை எடுத்து தங்கியிருப்பதே.

நேற்றும் கூட கொழும்பில் நடைபெற்ற கலவரம் காரணமாக விடுதிகளில் இருந்த அனைவரும் கைதாகும் பொழுது அந்த கொடிய கைது அலையிலே அரவிந்தனும் அடித்துச் செல்லப்படதவறவில்லை. கைது செய்யப்பட்டதும் தலைகீழாக கட்டித் தூக்கி மூக்கின் வழியே நீர் ஊற்றியதும் கண்கள் இரண்டிலும் மிளகாய்த் தூள் பொடி பொட்டலங்கள் கட்டி தூக்கப்பட்டதும்,குதிக்காலிலே குண்டாந்தடியால் அடிக்கப்பட்டதும், அப்பப்பா?... என்ன சித்திரவதை. என்ன கொடிய அராஜகத்தனமான வேலை அடியின் வடுக்கள் அங்கங்கு பதிந்து இருந்தது.

அன்று இரவு அவனால் தூங்க முடியவில்லை. காரணம்அடியின்பிரதிபலிப்புகள். அரவிந்தனுக்கு நன்றாகத் தெரிந்து விட்டது. என்னவெனில் இன்றைய பொழுது, நாளைய பொழுது என்பவை அனைத்தும் நிச்சயமற்றவை என்று. கண்களில் நீர் ததும்ப கொழும்பு நகரை வெறித்து நோக்கியவாறு நின்றான். அவனது மனதிலே தனது உறவுகளின் நிலைகளையும், கைது அறையிலே தனக்கு வழங்கப்பட்ட கொடிய சித்திரவதைகளுமே மீண்டும் மீண்டும் ஒளிர்ந்து கொண்டன.

''மச்சான் அரவிந்'' என்ற சங்கரின் வார்த்தைகள் அவனை ஒரு கணம் சுய நினைவிற்கு அழைத்து திரும்ப வைத்தது. என்ன மச்சான் விடிஞ்சதும் விடியாததுமாய்வீரகேசரி பேப்பரோட ஓடி வாறாய், என்ற அரவிந்தனின் கண்கள் பத்திரிகையின் தலைப்புச் செய்திக்காகத் துடிதுடித்தது. யன்னலின் வழியே வந்த காற்று பத்திரிகையைச் சடசடக்கச் செய்தது. கண்கள் எதற்காக துடித்தனவோ? அது இயற்கையின் அருளால் அரவிந்தனின் கண்களில் அலசுப்பட்டது.

பருத்தித்துறையில்இஸ்ரவேலிய டோறா படகு மூழ்கடிப்பு, இரண்டு கடற்கரும்புலிகள் தாக்குதல். அரவிந்தனுக்குதலை சுற்றுவது போன்று இருந்தது.

அவனுக்குத் தெரியும் பீரங்கிப் படகு மூழ்கடிக்கப்படுவதாயின் அது நாவற் காட்டின் கடற்கரையோரப் பிரதேசமாகத்தான் இருக்கும் என்பது. அவனது மனத்திரையிலே நாவற்காட்டில் அமைந்திருந்த தனது பிறந்த வீடு. தன்னைப்பத்துமாதம் சுமந்து ஈன்றெடுத்த தாய் தனது வெளிநாட்டுப் பயணத்திலே எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்துக் கொண்டு இருந்த சகோதரி, அனைத்தும் மனத்திரையிலே மீண்டும் மீண்டும் எதிரொலித்த வண்ணம் அலை மோதின.

ஒரு கணம் தடுமாறியவன் மீண்டும் அடுத்த தலையங்கங்களை வாசிப்பதற்காக கண்கள் கலங்கிய வண்ணம், பத்திரிகையினைப் புரட்டிப் பார்க்கிறான்.

''நாவற்காட்டின் கரையோரப் பிரதேசங்களில் பீரங்கிப் படகுகள் தாக்குதல். பொதுமக்கள் பலர் உயிரிழப்பு'' செய்தித் தலைப்பினை வாசித்தவனின் கண்கள் மீதியைப் படிக்க மறுக்கின்றன. காரணம் விழியின் வழியோரம் கண்ணீர் முட்டித் ததும்புகின்றது. அவன் கரங்களில் பற்றியிருந்த பத்திரிகை அவனையறியாமல் கைநழுவி கீழே விழுந்து விட்டது. அரவிந்தனின் உயிர் நண்பன் சங்கர் போனது கூட இவனிற்குத் தெரியவில்லை. உலகமே ஒருமுறை தலைகீழாக சுற்றுவது போன்ற உணர்வு. கடற்படையின் அகோர எறிகணை அவனது பிறந்த குடிலின் மீது வந்து வீழ்வது போன்ற சோகமான மனத்திரை நிகழ்வுகள் பல மீண்டும் மீண்டும்எதிரொலித்தன. யன்னலினூடே கலகலப்புடனும், சுறுசுறுப்புடனும் இருந்த கொழும்பு மா நகரை உற்று வெறிக்க நோக்கினான்.

தாயகமண்ணின்விடிவிற்காகவும், சுதந்திரத்திற்காகவும் ஓர் அளப்பரிய போராட்டம் ஈழ மண்ணிலே நிகழ்கின்றது. கடலின் நடுவே கண்ணைப் பறிக்கும் ஒரு பெரிய தீப்பிளம்பு.அதன் நடுவே,குண்டின் சக்தியால் சின்னஞ்சிறு துகழ்களாகப் போகும் ஓர் ஈழமண்ணின் மகனின் உடல். அதிரும் வெடியோசையுடன் நீரில் அமிழ்ந்து போகும் எதிரியின் படகு அனைத்தையும் ஒரு கணம் நினைக்கின்றான்.

விடியலிற்காய் நேற்று கடலில் காற்றோடு காற்றாய், மண்ணோடு மண்ணாய் கடலோடு கடலாய்க் கலந்தவனும், என்னைப் போன்ற ஓர் இளைஞன்தானே. அவனும் தன் சுகங்களையும்,எதிர்கால வாழ்க்கையையும் ஈழ மண்ணிற்காகவேதான் அர்ப்பணித்துள்ளான். அவனையும் என்னை ஈன்ற தாய் போல் ஒருத்திதானே பெற்றெடுத்தாள். அவளும் இன்று கலங்கிய விழிகளோடுதானேஇருப்பாள்ஒன்றா?...இரண்டா?.. தாயகம் நோக்கி விடுதலைப் பாதையில் எத்தனை ஆயிரம் இளைஞர்கள் இன்று அணி அணியாய் திரள்கின்றனர். அவர்கள் என்ன உணர்ச்சிகள் இல்லாத வெறும் மானிட மரக்கட்டைகளா? அல்லது மற்றவர்களைப் போல் சொத்துக்களுடனும், சுகங்களுடனும், தாயக மண்ணை மறந்து வெளிநாட்டில் வாழத் தெரியாதவர்களா? இல்லை அவர்கள் சாதாரண பிறப்புக்களல்ல. தெய்வப் பிறப்புக்கள், என நெடு நாளாக தீர்க்கமாக எடுக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத்திற்கு முற்றுப்புள்ளியிட முனைந்தவன் அதற்கு முற்று இட்டவாறு கூறினான். நான் வெளிநாடு சென்ற சமயம், எனது உறவுகளின் மீது எதிரியின் எறிகணைகள் வந்து வீழ்ந்தால், நான் யாருக்காக வாழ்வது?. யாருக்காக உழைப்பது?.. என்ற அரவிந்தனின் தோள்களில், மூலையில் இருந்த பயணப்பை ஏறுகின்றது. மாடியின் படிகளில், கீழ் நோக்கி அவன் பாதங்கள் படர்கின்றது. தாயக மண்ணையும், தாய்மானப்பற்றையும், நெஞ்சிலே சுமந்தவாறு தாயகம் நோக்கி ஒரு அக்கினிக் குஞ்சின் பயணம். தொடர்கின்றது.

---

# மனிதனைத்

ரான தார்மீகப் பிரகடனங்கள் நிறையவுண்டு என்பதும் இவர்களது வாதம். சர்ச்சைக்குரிய இந்த வாதப் பிரதிவாதங்களை இங்கு விபரித்துக் கூறுவது அவசியமில்லை.

கார்ள் மாக்ஸ் ஒருமனிதாபிமானி. மானிடத்தின் விடுதலையை விரும்பியவர். முழு மனிதனைக் கனவு கண்டவர். மனித உலகத்தை மாற்றியமைக்க விரும்பியவர். மனித செயற்பாடு மூலம் அது சாத்தியமாகும் என நம்பியவர். அவரது தார்மீக இலட்சியம் நெருப்பு வரிகளாக அவரது எல்லா எழுத்துகளிலும் சுடர் விடுகிறது.

மனிதன் யார்? என்ற விசாரணையை அவர் நடத்தவில்லை. அது அவரது ஆய்வுப் பொருளும் (Analytical Object) அல்ல. ஆனால் மனிதம் பற்றியும், மனிதத்துவம் பற்றியும், மனித வளர்ச்சி பற்றியும் அவர் அக்கறையோடு எழுதியிருக்கிறார்.

மனிதா சாரம் (Human Essence) என்ற பதம் அவரது தத்துவார்த்தச் சிந்தனையின் மையமாக அமைகிறது. மனித ஆக்க சக்தியை, சிருஷ்டி சக்தியை, அந்தச் சொல் குறித்து நிற்கிறது. சாராம்சத்தில், மனிதனை ஒரு சிருஷ்டி கர்த்தாவாக, ஒரு படைப்பாளியாக அவர் பார்த்தார். பொருளுலகத்தைப் படைப்பவனாகவும் வரலாற்றை சிருஷ்டிப்பவனாகவும் மனிதனை அவர் சித்தரித்தார். இந்த மனித சிருஷ்டி சக்தியையே தொழிலாக்க சக்தியாக (Labour Power) பொருட்படைப்பின் மூலசக்தியாக 'மூலதனத்தில்' வர்ணிக்கிறார். இந்தத் தொழிலாக்க சக்தி மனிதனிடமிருந்து அந்நியமாதலையே மனிதச் சிதைவு எனக் குறிப்பிடுகிறார்.

முதலாளியம் மனித தொழிலாக்க சக்தியால் கட்டி எழுப்பபடுகிறது. மனிதன் கட்டிய அக்கோட்டைக்குள் மனிதனே சிறைப்பட்டுவிடுகிறான். படைப்பாளியை படைப்பே விழுங்கிக் கொள்கிறது. முதலாளியத்தின் அநீதியான சமூக உறவுகளால் விலங்கிடப்பட்டிருக்கும் மனிதனையே கார்ள் மாக்ஸ் கண்டார். எனவே, 'மூலதனத்தில்' சித்தரிக்கப்படும் மனிதன் முழு மனிதன் அல்ல. அவன் தன்னையிழந்த, தனது சுயத்தை இழந்த, தனது சுதந்திரத்தை இழந்த மனிதன். பொருண்மிய குறியீடாக, பொருண்மிய சக்திகளால் ஆட்டிப்படைக்கப்படும்ஒரு பொம்மை மனிதன்.

பொருளிய வாழ்விற்கும்,பொருண்மிய உறவுகளுக்குமே கார்ள் மாக்ஸ் முக்கியத்துவம் கொடுத்தார். மனித மனம், வாழ்க்கையை நிர்ணயிப்பதல்ல, பொருளிய வாழ்வே மனித மனதை நிர்ணயித்துவிடுகிறது என்று அவர் எழுதினார். சமூக உறவுகள் என்பது அவரது ஆய்வில், உற்பத்தி உறவுகளால் உருவாகும் வர்க்க உறவுகளையே குறிக்கிறது. இந்த வர்க்க உறவுகளைத் தாங்கி நிற்கும் வர்க்க மனிதனையே அவர் சமூக மனிதனாகக் கண்டார்.எனவே,மாக்சின் சமூக மனிதன் பொருளாதாரக் கட்டுமாணத்தின் வரம்பிற்குள் மட்டுமே முடங்கிக் கிடக்கிறான்.

சமூக உறவுகள் என்பது சிலந்தி வலைபோன்று சிக்கலானது.பல்முகப் பரிமாணங்களைக்கொண்டது. சமூக உறவுகள் அனைத்தையும் பொருளாதார உறவு என்ற வட்டத்திற்குள் வரையறுத்துவிட முடியாது.

சமூக உறவுகள் என்ற முடிச்சுகள் பல. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையானவை. தாய் பிள்ளைஉறவு, சகோதர உறவு, தாம்பத்திய உறவு, குடும்ப உறவு, நட்புறவு, காதலுறவு, கல்வி உறவு, கட்சி உறவு, சமய உறவு, சாதி உறவு, கலை உறவு, பண்பாட்டு உறவு என்பவையும், இன்னும் எண்ணில்லாதவையுமாக சமூக உறவுகளால் மனிதர்கள் பிணைந்து கிடக்கிறார்கள். இந்த சமூக உறவுகளும், அவை விளைவிக்கும் தாக்கங்களும், மனித சுயத்தின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் ஏதுவாகின்றன. மனித உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைகின்றன.

வர்க்க உறவுகளை மட்டும் பிரதிபலிக்கும் வெறும் பொருளாதார மனிதனை முழுமையான சமூக மனிதனாகக் கொள்ளமுடியாது.

மனிதன் வெறும் உழைக்கும் இயந்திரம் அல்ல. மனிதனின் சாரத்தை வெறும் உழைப்பு சக்தியாக, படைப்பாற்றல் சக்தியாக மட்டும் சித்தரித்துவிடமுடியாது. மனிதனிடம் உள்ளமுண்டு; உணர்வுகள் உண்டு; சமூகக் கலாசார வாழ்வில் பெறப்பட்ட பண்புகளுண்டு. இவை எல்லாம் ஒன்றுதிரண்ட மனிதமுண்டு, சுயமுண்டு, ஆளுமையுண்டு, ஆன்மாவுண்டு. (இங்கு ஆன்மா என்ற பதம் மனதின் ஆழ்நிலையைக் குறிக்கிறது)

மாக்சிய தரிசனம் தனிமனிதனை ஒதுக்கி விட்டதால் முழுமனிதனைக் காட்டவில்லை.

சமூக அறிவியலுக்கு மனிதத்துவம் பற்றிய விசாரணைகள் அவசியம் இல்லை என்பது சில மாக்சிய தத்துவாசிரியர்களின் கருத்து. மாக்சியம் சமூகவியலாக மட்டுமன்றி மனிதவியலாக முழுமைபெறுவதற்கு மனிதன் பற்றிய ஆழமான பார்வை தேவை என்பது வேறு சிலரது வாதம். மாக்சியத்தில்தனிமனிதமும்,மனிதத்துவமும் உதாசீனம் செய்யப்பட்டதால்தான், மாக்சிய சித்தாந்தத்தைத் தழுவிக் கொண்ட சோசலிச அரசுகள் சர்வாதிகாரத்தை நிலை நிறுவி, தனி மனித சுதந்திரங்களை நசுக்கமுயன்றன என்பதும் இவர்களது நிலைப்பாடு.

மாக்சியத்திலுள்ள இந்தக் குறைபாட்டை எப்படி நீக்குவது? மனிதனுக்கு முழுமையான விளக்கம் எவ்விதம் அளிப்பது?

மாக்சின் சமூகவியலுக்கும் பிரைட்டின்மனவியலுக்கும் திருமணம்செய்து வைத்தால் இந்தக் குறைபாட்டை நீக்கிவிடலாம் என சில மாக்சியவாதிகள் கருதினர். ஆனால் இந்த முயற்சிகளும் வெற்றிபெற்றதாகத் தெரியவில்லை. இரண்டு வெவ்வேறான ஆய்வு இலக்குகளைக்கொண்ட அறிவியல் உலகங்களை ஒன்றிணைப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. நவ பிரைடிய சிந்தனையாளர்களான லக்கான் (LACAN) போன்றவர்கள் உளப்பகுப்பியலை மொழி அமைப்பியலாக உருமாற்றம் செய்ய முனைந்தால் இந்த முயற்சிகள் மேலும் சிக்கலடைந்துள்ளன.

இப்படியாக மனிதனைத் தேடும் மனிதனின் முயற்சி தொடர்கிறது.

இந்த உலகம் மாறிவருகிறது.மாறிவரும் இந்த உலகத்துடன் மனிதனும் மாறிவருகிறான். காலம் என்ற காற்று அடித்துச் செல்லும் மாற்றம் என்ற படகில். ஒரு முடிவில்லாப் பயணத்தைத் தொடரும் மனிதன், தன்னை நோக்கிப் பார்க்கிறான். அந்தச் சுயதரிசனத்தில், அவனது முகம் அவனுக்குப் புலப்படுவதில்லை. அது சதா மாறிக்கொண்டிருக்கிறது. இறந்த காலத்தின் சுவடுகளும், எதிர் காலத்தின் நம்பிக்கைகளுமே அவனுக்குத் தென்படுகிறது.

ஆனால் மனிதன் தன்னைத்தேடுகிறான். முடிவில்லாத தொடர்கதையாக அந்தத் தேடுதல் தொடர்கிறது.

நன்றி; வெளிச்சம்

## முள்ளாய் மாறிய மலர்கள்

மலரே!
மென்மையும் வாசனையும் மிக்க
உன் இதழ்கள்
இன்று
முள்ளாய் மாறியதேன்?
உன்
மண்ணை ஆக்கிரமித்த
அந்நியக்கூலிகள்
ஆதிக்கப் படைகளுடன்
பெண்மையைப் பறிக்காது
அக் கொடிய கரங்களை
கிறிக் கிழிக்கவா?

வெண்மையாய்த் தெரிந்த
உன் வேல் கோலும் விழிகள்
கோவைப் பழங்களாய்
சிவந்து கிடப்பதேன்?
நீதியை மறந்துன்
மக்களைக் கொல்லும்
சிங்களப்படைகள் மேல்
சீற்றம் கொண்டு
மதுரையை எரித்த
கண்ணகி போல
கோபக் கனலை
விழிகளில் மூட்டினாயா?


அடி பெண்ணே
அகப்பையைப் பிடித்த
உன்னழகுக் கரங்களில்
அது என்ன புதிதாய்?

ஆக்கிரமிப்பவனை
அழித்து ஒழிக்க
அடிமைச் சங்கிலி
உடைத்து எறிய
கையில்
எடுத்த கணமே
எதிரியைத் துளைக்கும்
துப்பாக்கி தானா?

ஒடுங்கி நடப்பதும்
அடங்கிக் கிடப்பதும் தான்
பெண்மைக்கு அழகென்றால்
நீயென்ன பெண்ணில்லையா?
யார் சொன்னார்கள்
மடையர்கள்
அநீதியைக் கண்டும்
கண்களை மூடிக்கொள்ள
நீயென்ன கோழையா?
உணர்வுகளின்றி
ஜடமாய் வாழ நீ
இறந்தா பிறந்தாய்?

தமிழீழ விடியலின்
இனிய வருகைக்கு
வீறுடன் எழுந்து
போரிடும் தளிரே
நீ வளர்ந்து விட்டாய்
மிக வேகமாக
உன்னை
வளர்த்து விட்டார்கள்
இனியும் உன்னை
அடிமையாய்
அடக்கி வைக்க முடியாது!

வசந்தா ரூபன்




# கூவம் நதியில் ஒரு பயங்கரம்: அணுக்கதிர் கருவியுடன் ஆபத்தான விளையாட்டு

அந்தஅசம்பாவிதம்நிகழ்ந்தது செப்ரெம்பர் மாதம் 17-ம் திகதி! அன்று பிற்பகல் ஒரு மணிக்கு மூன்று மோட்டார் சைக்கிள்கள் சென்னையில் மெரீனாவின் கோடியில், கோட்டைக்கு அருகிலுள்ள நேப்பியர் பாலத்தை அணுகின! அவற்றிலிருந்து ஐந்து பேர் இறங்கி, ஒன்றரை கிலோவுக்கு கொஞ்சம் அதிகம் எடையுள்ள ஒரு பையைக் கூவம் ஆற்றில் போட... இன்று சென்னை நகரமே கதிகலங்கி நிற்கிறது!

'சென்னையில் அணுக்கதிர் வீச்சா? ...... சென்னை சுடுகாடாகுமா?... நீரில் அணுக்கதிர் வீச்சுப் பரவினால், கடல்வாழ் உயிரினங்கள் உயிரோடு சமாதியாகுமா? .. காற்றில் அணுக்கதிர்வீச்சு பரவினால் இந்தத் தலைமுறை மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ தலைமுறை மனித வாழ்க்கை சிதையுமே? ... இப்படிப் பீதியுடன் கூடிய கேள்விகளும் யூகங்களும் சென்னை நக

தான்சக்திவாய்ந்தஇந்தஅணுக்கதிர் மூலங்கள் திருடப்பட்டன என்பது காவல் துறை அளித்த தகவல்;

இவ்வளவு ஆபத்தான பொருட்களை திருடி வந்தவர் யார்? .. திருட்டுக்கு நோக்கம் என்ன?

இந்த அணுக்கதிர் மூலங்களை திருடியவர்கள் எவரும் பொருளாதார நோக்கத்திற்காக இந்தத் திருட்டைச் செய்யவில்லை! ஹாலிபர்ட்டன் நிறுவன நிர்வாகத்தைப் பழிவாங்குவதாக நினைத்துக் கொண்டு இப்படிச் செய்திருக்கிறார்கள்!

அந்த நிறுவனத்தில் கொஞ்ச நாட்களாகவே உட்பூசல் இருந்து வந்திருக்கிறது. அலிஸ்டர் டிமாண்ட்டே என்ற தொழிலாளி, நிர்வாகத்திற்கு எதிரான நிறைய நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தவராம். இவரை வேறொரு இடத்திற்கு மாற்றம் செய்து நிர்வாகம் உத்தரவிட்டதிலிருந்து தான் பிரச்சினை தீவி

மறுநாளே சம்பந்தப்பட்ட ஐந்து தொழிலாளர்களையும் கைது செய்து 'தீவிரமாக' விசாரித்ததில்.அவர்கள் நடந்ததைஒப்புக்கொண்டு வாக்குமூலம் தந்தார்கள்! உடனே வல்லுனர்களும், நாங்களும் கூவத்துக்கு விரைந்தோம்.'' என்கின்றனர் காவல்துறையினர்.

''இப்படி ஒரு குற்றம் நடந்திருப்பது உலகஅளவிலேயே இதுதான் முதல் தடவை என நினைக்கிறேன்! முன்பு சில சந்தர்ப்பங்களில் அணுக்கருவிகள் காணாமல் போனதுண்டு. ஆனால் தனிப்பட்ட வஞ்சம் தீர்ப்பதற்காக பொது ஆபத்து விளைவிக்க முயன்றது இதுதான் முதல் தடவை'' என்றார் காவல் துறை அதிகாரி. கூவம் ஆற்றைப் பொறுத்தவரை ஐந்து அடி மட்டத்துக்கு தண்ணீர் இருந்தால் அதற்குக் கீழே நான்கடிகளுக்கு சகதி இருக்கிறது. இந்த பொருட்களே சகதிக்குள் செருகிக் கிடக்கின்றன. இவற்றை மிக எச்சரிக்கையாக எடுக்கவேண்டி

நடாத்த முடிவு செய்தோம்'' என்கிறார் மீட்பு அதிகாரி.

''இந்தக் கதிர்வீச்சுக் கருவியினால் இரண்டு வித பாதிப்பு உண்டு வெளிப்பாதிப்பு உள்பாதிப்பு! இந்தக் கருவியை அதிகபட்சம் ஐந்து நிமிடங்கள் ஒருவர் கையால் பிடித்தாலே போதும் ... உள்ளங்கை பொசுங்கிவிடும் அந்தப் புண் ஆறுவது ரொம்பக்கஷ்டம். அதனால் கூவத்தில் மூழ்கிக் கொண்டுவரத் துணிந்தவர்களையும் தடுத்து விட்டோம். இந்தக் கருவியை ஒரு அறைக்குள் வைத்து விட்டுச் சில நாட்கள் அந்த அறையில் புழங்கினாலும் அபாய விளைவுகள் உண்டாகும். இவை வெளிப்பாதிப்புகள் கருவி சேதமடையாது இருந்தாலும் இவையெல்லாம் உண்டு'' என அணுவல்லுனர் கூறுகிறார்.

தண்ணீரில் உள்ள கருவிகளை வெளியே எடுக்க முடியாமலேயே போய்விட்டால்? இப்போதைக்கு ஒன்றும் ஆகாது. கூவம் தண்ணீர் மற்றும் அதில் உள்ள மண்ணின் தன்மையை வைத்துப் பார்க்கும் போது அந்தக்கருவியின் மேல் பகுதிமுழுவதும் அரிக்கப்பட்டு உள்ளேயிருக்கும் கதிர்வீச்சு வெளிப்பட குறைந்தது ஐநூறு வருடங்களாவது ஆகும். அந்த அளவுக்கு மிக கனமான தொழில்நுட்ப பாதுகாப்புகளுடன் தான் இவை தயாராகியுள்ளன. இக்கருவியின் ஒவ்வொரு சதுர அங்குலமும் 25 ஆயிரம் இறாத்தல் விழுந்தாலும் தாங்க கூடியவை என்கின்றனர் நிபுணர்கள்.

-- நன்றி ஜூனியர் போஸ்ட்

நல்லின புலாக்கன்று

# கூவம் நதியில் ஒரு பயங்கரம்: அணுக்கதிர் கருவியுடன் ஆபத்தான விளையாட்டு

அந்தஅசம்பாவிதம்நிகழ்ந்தது செப்ரெம்பர் மாதம் 17-ம் திகதி! அன்று பிற்பகல் ஒரு மணிக்கு மூன்று மோட்டார் சைக்கிள்கள் சென்னையில் மெரீனாவின் கோடியில், கோட்டைக்கு அருகிலுள்ள நேப்பியர் பாலத்தை அணுகின! அவற்றிலிருந்து ஐந்து பேர் இறங்கி, ஒன்றரை கிலோவுக்கு கொஞ்சம் அதிகம் எடையுள்ள ஒரு பையைக் கூவம் ஆற்றில் போட... இன்று சென்னை நகரமே கதிகலங்கி நிற்கிறது!

'சென்னையில் அணுக்கதிர் வீச்சா? ...... சென்னை சுடுகாடாகுமா?... நீரில் அணுக்கதிர் வீச்சுப் பரவினால், கடல்வாழ் உயிரினங்கள் உயிரோடு சமாதியாகுமா? .', காற்றில் அணுக்கதிர்வீச்சு பரவினால் இந்தத் தலைமுறை மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ தலைமுறை மனித வாழ்க்கை சிதையுமே? . . . இப்படிப் பீதியுடன் கூடிய கேள்விகளும் யூகங்களும் சென்னை நகரைக் கலக்கிக் கொண்டிருக்க . . .

''கூவத்தில் போடப்பட்டிருப்பவை எச்சரிக்கையோடு கையாளப்பட வேண்டிய மிக மிக ஆபத்தான அணுக்கதிர் வீச்சு மூலங்கள் என்கிறார்கள் வல்லுநர்கள்

''அமெரிஷியம்-பெரிலியம் என்னும் மூலங்கள் இரண்டிலும், காரியம்—137 என்னும் கதிர் மூலம் ஒன்றிலுமாக மூன்று பொருள்கள் அளவில் சிறியவை, ஆனால் கொஞ்சம் கூட அலட்சியப்படுத்த முடியாத அளவுக்கு ஆபத்தானவை'' என்றும் சொல்கிறார்கள்!

இந்தக்கதிர்வீச்சுப்பொருள்கள் சென்னை, நெற்குன்றத்திலுள்ள தனியார் தொழிற்சாலை ஒன்றிலிருந்து திருடி வரப்பட்டவை! ஹாலி பர்ட்டன் ஆப்ஷோர் கம்பெனி என்னும் வெளிநாட்டு நிறுவனம், இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை வாயு கமிஷனோடு ஒப்பந்தம் செய்து கொண்டு பூமிக்குள் இருக்கும் எண்ணெயைக் கண்டு பிடிப்பதற்காக அணுக்கதிரைப் பயன்படுத்தி வந்த இந்தநிறுவனத்திலிருந்துதான்சக்திவாய்ந்தஇந்தஅணுக்கதிர் மூலங்கள் திருடப்பட்டன என்பது காவல் துறை அளித்த தகவல்;

இவ்வளவு ஆபத்தான பொருட்களை திருடி வந்தவர் யார்? .. திருட்டுக்கு நோக்கம் என்ன?

இந்த அணுக்கதிர் மூலங்களை திருடியவர்கள் எவரும் பொருளாதார நோக்கத்திற்காக இந்தத் திருட்டைச் செய்யவில்லை! ஹாலி பர்ட்டன் நிறுவன நிர்வாகத்தைப் பழிவாங்குவதாக நினைத்துக் கொண்டு இப்படிச் செய்திருக்கிறார்கள்!

அந்த நிறுவனத்தில் கொஞ்ச நாட்களாகவே உட்பூசல் இருந்து வந்திருக்கிறது. அலிஸ்டர் டிமாண்ட்டே என்ற தொழிலாளி, நிர்வாகத்திற்கு எதிரான நிறைய நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தவராம். இவரை வேறொரு இடத்திற்கு மாற்றம் செய்து நிர்வாகம் உத்தரவிட்டதிலிருந்து தான் பிரச்சினை தீவிரமடைந்திருக்கிறது.

இதனைத் தொடர்ந்து கோபமடைந்த அவர் கம்பனிக்கு எதிராக அபாயம் நிறைந்த அணுக்கதிர் மூலங்களை திருட முடிவு செய்திருக்கிறார். அவற்றை திருடிய இவர்தான் நிறுவனத்தின் கதிரியக்கப் பாதுகாப்புப் பொறுப்பு அதிகாரி. எனவே வேலை சுலபமானது! இவற்றைத் திருடி ஐவராக இம்மூலங்களை கொண்டு சென்று கூவத்தில் போட்டுவிட்டு போய்விட்டார்கள்.

இந்தப் பொருட்கள் திருட்டுப் போய் ஏழு நாட்களுக்கு பிறகுதான் பொலிஸில் புகார் செய்திருக்கிறது அந்த நிறுவனம். சம்பந்தப்பட்ட ஐவரின் பேரிலும் தான் சந்தேகம் என புகாரில் சொல்லப்பட்டது.

கடந்த மாதம் 7-ம் திகதியன்று அணுக்கதிர் வல்லுனர்கள் பலர், கதிர்வீச்சைக் கண்டறியும் கருவிகளோடு, சென்னை நகரைப் பலமுறை வலம் வந்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பொருட்களைப்பற்றிய தடயம் எதுவும்கிடைக்கவில்லை!

''எங்களிடம் வழக்கு வந்த மறுநாளே சம்பந்தப்பட்ட ஐந்து தொழிலாளர்களையும் கைது செய்து 'தீவிரமாக' விசாரித்ததில். அவர்கள் நடந்ததைஒப்புக் கொண்டு வாக்குமூலம் தந்தார்கள்! உடனே வல்லுனர்களும், நாங்களும் கூவத்துக்கு விரைந்தோம்.'' என்கின்றனர் காவல்துறையினர்.

''இப்படி ஒரு குற்றம் நடந்திருப்பது உலகஅளவிலேயே இதுதான் முதல் தடவை என நினைக்கிறேன்! முன்பு சில சந்தர்ப்பங்களில் அணுக் கருவிகள் காணாமல் போனதுண்டு. ஆனால் தனிப்பட்ட வஞ்சம் தீர்ப்பதற்காக பொது ஆபத்து விளைவிக்க முயன்றது இதுதான் முதல் தடவை'' என்றார் காவல் துறை அதிகாரி. கூவம் ஆற்றைப் பொறுத்தவரை ஐந்து அடி மட்டத்துக்கு தண்ணீர் இருந்தால் அதற்குக் கீழே நான்கடிகளுக்கு சகதி இருக்கிறது. இந்த பொருட்களே சகதிக்குள் செருகிக்கிடக்கின்றன. இவற்றை மிக எச்சரிக்கையாக எடுக்கவேண்டியிருப்பதால்மீட்புப்பணி தாமதமாகிறது.

முதலில் அந்தப் பொருள்கள் இருக்கும் இடத்தைச் சுற்றி ஒரு மீற்றர் சுற்றளவு குழாயை கிரேன் மூலம் இறக்கினோம்! தண்ணீரின் அலைக்கழிப்பில் அந்த கதிர்வீச்சுப் பொருட்கள் நகர்ந்துவேறெங்கும் போய்விடாதிருக்க இந்த ஏற்பாடு. பிறகு, குழாய்க்குள் இறக்கும் தண்ணீரை வெளியேற்றி பொருட்களை எடுப்பதே திட்டம். ஆனால் நீரை இறைக்க இறைக்க ஊறுவதால் திட்டம் பலனளிக்கவில்லை.

பிறகு, மீனவர்களின் துணையோடு வாளி, சால் ஆகியவற்றை கயிற்றில் இறக்கி, அந்தப் பொருட்களைப் பாதுகாப்பாக வாரியெடுக்கமுயன்றோம். இந்த முயற்சியும் பயனளிக்கவில்லை! பிறகு, நவீன கருவிகள் சிலவற்றை பயன்படுத்திப் பார்த்தோம் அதிலும் பயனில்லை!

'மீட்பு நடவடிக்கைகளுக்கு ஒரு மீற்றர் சுற்றளவு போதவில்லை எனவே பொருட்கள் இருக்கும் மூன்று மீற்றர் விட்ட முள்ள ஒரு பகுதிக்கு சிறிய அணைகட்டி தேடுதல் நடாத்த முடிவு செய்தோம்'' என்கிறார் மீட்பு அதிகாரி.

''இந்தக் கதிர்வீச்சுக் கருவியினால் இரண்டு வித பாதிப்பு உண்டு வெளிப்பாதிப்பு உள்பாதிப்பு! இந்தக் கருவியை அதிகபட்சம் ஐந்து நிமிடங்கள் ஒருவர் கையால் பிடித்தாலே போதும் ... உள்ளங்கை பொசுங்கிவிடும் அந்தப் புண் ஆறுவது ரொம்பக்கஷ்டம். அதனால் கூவத்தில் மூழ்கிக் கொண்டுவரத் துணிந்தவர்களையும் தடுத்து விட்டோம். இந்தக் கருவியை ஒரு அறைக்குள் வைத்து விட்டுச் சில நாட்கள் அந்த அறையில் புழங்கினாலும் அபாய விளைவுகள் உண்டாகும். இவை வெளிப்பாதிப்புகள் கருவி சேதமடையாது இருந்தாலும் இவையெல்லாம் உண்டு'' என அணு வல்லுனர் கூறுகிறார்.

தண்ணீரில் உள்ள கருவீகளை வெளியே எடுக்க முடியாமலேயே போய்விட்டால்? இப்போதைக்கு ஒன்றும் ஆகாது. கூவம் தண்ணீர் மற்றும் அதில் உள்ள மண்ணின் தன்மையை வைத்துப் பார்க்கும் போது அந்தக்கருவியின் மேல் பகுதிமுழுவதும் அரிக்கப்பட்டு உள்ளேயிருக்கும் கதிர்வீச்சு வெளிப்பட குறைந்தது ஐநூறு வருடங்களாவது ஆகும். அந்த அளவுக்கு மிக கனமான தொழில்நுட்ப பாதுகாப்புகளுடன் தான் இவை தயாராகியுள்ளன. இக் கருவியின் ஒவ்வொரு சதுர அங்குலமும் 25 ஆயிரம் இறாத்தல் விழுந்தாலும் தாங்க கூடியவை என்கின்றனர் நிபுணர்கள்.

-- நன்றி ஜூனியர் போஸ்ட்


## நல்லின பலாக்கன்று முற்றிலும் இலவசம்

5 ஜாம் போத்தல்களை எமது நிறுவனத்தில் ஒப்படைத்து அதற்குரிய பணம் ரூபா 25|- பெற்றுக் கொள்வதுடன் நல்லினப் பலாக்கன்றை இலவசமாக எடுத்துச் செல்லுங்கள். சிறிதளவு பலாக்கன்று உள்ளபடியால் முந்துங்கள்.

**ரேஸ்ட்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட்**

14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(சி-7992)

## பதப்படுத்திய பலாப்பழம்

நன்கு முற்றிப் பழுத்த பலாப்பழச் சுளைகளை சீனிப்பாணியில் பதப்படுத்தப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளது. அதே சுவை. அதே மணம். இன்றே வாங்குங்கள். எங்கும் கிடைக்கும்.

**ரேஸ்ட்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட்**

14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்

(சி-7991)

# "நெஞ்சோடு கலந்து வரும் மாவீரர் நினைவலைகள்"

பட்டொளி வீசிப் பறக்கின்ற புலிக்கொடிகள், தென்றலின் தாலாட்டிலே அசைந்தாடும் சிவப்பு, மஞ்சள் நிறத் தோரணங்கள், வீதிகள் மூடியே உயர்ந்து நிற்கும் வரவேற்பு வளைவுகள், இவை யாரை வரவேற்க காத்திருக்கின்றன?

வீசும் மந்தமாருதத்தின் சிலிர்ப்புகள் உஸ் யாரும் சத்தம் செய்யாதீர்கள், புனிதர்கள் உலா வருகிறார்கள்; காதோடு! கதைக்கின்றனவே

ஆமாம்; மாவீரர்களின் நினைவலைகள் இங்கே, மக்களோடு கலந்துறைய வருகின்றன. உள்ளங்களில் எழும் உணர்ச்சிகள், காற்றோடு கலந்து வரும் கீதங்கள் எங்கள் மண்ணின் மைந்தர்களின் நினைவைச் சுமந்து வருகின்றன. எட்டுத் திக்கிலும், விண்ணை முட்டியும் ஓங்கி ஒலிக்கும் எங்கள் வீரர்களின் தியாக வரலாற்றை; தம் விலைமதிப்பற்ற தற்கொடைகளினால், காவியமாக்கியஎங்கள் சகோதரர்கள் பாடித் திரிந்த புனித பூமி; சிலிர்ப்போடு பெருமிதம் கொள்கிறது.

எந்தன், பாசமிகு மைந்தர்கள், என்னுள் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள்; உங்கள் காலடிகளை மெல்லப் பதியுங்கள்: தமிழீழத் தாய் வாஞ்சையோடுசொல்கிறாள்

மாற்றான் பாதச் சுவடுகளை அவள் மேனியிலிருந்து அகற்றி அவளை இழுத்திருக்கும் விலங்குகளை உடைத்தெறிய தம்முயிரைத் தந்திட்ட, அவள் ஏற்றமிகு மைந்தர்களின் தியாகங்களைப் போற்றுகிறாள் தமிழீழத் தாயவள்.

அணை கடந்து வந்த ஆதிக்க வெள்ளங்களை தம் உடல்களையே அரணாக்கி எங்கள் தமிழ் வீரமதை குருதியினால் எழுதப்படும் எம் மானுட காவியத்தை உலகே வியந்து போற்றும் தம் அரிய தியாகங்களால் எழுதிச் சென்ற எங்கள் சகோதரர்களால் நாங்கள் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றோம்.

இவ்வகையில், எமது அன்னை மண்ணின் தளைகளை தகர்த்தெறிவதற்காய் தம்மை அர்ப்பணித்த மாவீரர்களின் கனவுகளை, அவர்கள் ஏற்றுக்கொண்ட இலட்சியங்களை நனவாக்கத் துடிக்கும் தமிழினத்தின் எழுச்சி வெளிப்பாடுதான் மாவீரர் தினம்.

எமது வளங்களை அழித்தொழித்து எம்மை அடிமைகளாக்க முற்பட்ட ஆதிக்கப் பேய்களின் அரக்கத் தனங்களைத் தட்டி ஒதுக்கிட, தம்மையே தந்திட்ட எமது சகோதரர்களின்தன்னலமற்ற தியாகங்களைப் போற்றி, புது வரலாறு படைக்கும் எமக்கு உந்துசக்தியாக அமைவது தான் மாவீரர் தினம்.

அந்தவகையில், இந்த எழுச்சி தினத்தை, தமிழீழம் இம்முறையும் பெருவிழா கோலத்தோடு அனுஷ்டித்து வருகிறது. மாவீரர் தினத்தையொட்டி பல வாரங்கள் முன்பிருந்தே தமிழீழம் தன்னை தயார்படுத்தி வந்தது. மாவீரர் திருவுருவப் படங்கள் அமைத்தல், நல்வாழ்வுத் திட்டங்கள் என ஆரம்பித்து, பெருவீதிகள், ஒழுங்கைகள் என்பன சிரமதான அடிப்படையில் சுத்திகரிக்கப்பட்டன. மாவீரர்களின் திருவுருவப் படங்களை, மக்களின் அஞ்சலிக்காய் வைப்பதற்காய் மண்டபங்களும், பாரிய கொட்டகைகளும் தமிழீழமெங்கும், குறிப்பாகக் குடாநாடெங்கும் அமைக்கப்பட்டன. பிரதான வீதிகள், சந்திகள் தோறும் மஞ்சள், சிவப்பு நிறச் சிறுகொடிகள் கட்டப்பட்டும், வர்ண விளக்குகள் எனவும் தமிழீழம் புதுக்கோலம் பூண்டது.

குடாநாட்டு வீதிகளில் பல இடங்களில் அலங்கார வரவேற்பு வளைவுகள் பல நூற்றுக்கணக்கில் அமைக்கப்பட்டன. மாவீரர் நினைவுகளை சித்தரித்தும், சாதனை மிகு பல தாக்குதற் சம்பவங்களை கொண்டும் வரையப்பட்ட ஓவியங்கள் இவற்றில் இடம் பெற்றிருந்தன பல இடங்களில், வீரச்சாவடைந்த மாவீரனொருவனை விதைகுழிக்குக் கொண்டு செல்லும் போராளியின் உருவமும், மாவீரர் கல்லறைகளின் முன் அஞ்சலி செலுத்தும் உறுதியின் உறைவிடமும் மிகச் சிறப்பான முறையில் அமைந்திருக்கக் காணப்பட்டது.

மாவீரரைப் போற்றும் பதாகைகள் வீதிகளின் இருமருங்கிலும் கட்டப்பட்டிருந்தன. மக்களின் உணர்ச்சிமயமான பங்களிப்புகளையும் பல இடங்களில் காண முடிந்தது. இம்முறை, மக்கள் குழுக்கள், குழுக்களாகவும், தனித்தும் தாமே முன்வந்து, ஏற்பாடுகளைச் செய்வதில் ஆர்வங் காட்டியமை குறிப்பிடத்தக்கது.

மாவீரர்களின்பெயர்களைத் தாங்கிய வீதிகளின் பெயர்ப் பலகைகளும், மாவீரர் நினைவு ஆலயங்களும், நினைவுத் தூபிகளும் புதுப் பொலிவுடன் விளங்கின. திருவுருவப் படங்களை அஞ்சலிக்கு வைப்பதற்காக அமைக்கப்பட்ட பாரிய கொட்டகைகள்வர்ண விளக்குகளாலும், தோரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன இங்கு வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் என நான்கு கோட்டங்களில் பல இடங்களிலும், தென் தமிழீழத்தின் மாவட்டங்களின் தொடர்பகங்களினாலும் வீரச்சாவை அணைத்துக் கொண்டு, வரலாறு படைத்திட்ட மாவீரர்களின் உருவப் படங்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருந்தன.

மாவீரரின் புகழ் பாடும் வீதி நாடகங்களும், தெருக்கூத்துக்களும் குடாநாடெங்கும் நடைபெற்றன. இயல்பான எளிய மொழிநடையில் அமைந்து, மாவீரர்களின் தற்கொடைகளைப் போற்றி ஏற்றிட்ட இந்நிகழ்வுகளைப் பெருமளவு மக்கள் கண்டுகளித்தனர்.

பல சமூக சேவை அமைப்புக்களால் மாவீரர் தினத்தையொட்டி மாணவர்களிடையேயும், மக்களிடையேயும் மாவீரர் தம் சிந்தனைகளை தூண்டும்வண்ணம் பல மாவீரர் நினைவாகப் போட்டிகள் நடாத்தப்பட்டன.

மாவீரர் தினத்தை ஒட்டிய மாவீரர் வாரம் ஆரம்பமான கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு, தமிழீழத்திலுள்ள பாடசாலைகள், புலிகளின் பாசறைகள், தனியார், அரச நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், பொது இடங்கள், கல்வி நிறுவனங்கள் எனப் பல இடங்களிலும் தேசியக் கொடியேற்றலுடன் மாவீரர் வாரம் ஆரம்பமாகியது. கொடியேற்றலைத் தொடர்ந்து, பாடசாலைகள் தோறும், அவ்வப் பாடசாலைகளில் கல்விகற்று தமிழீழ விடுதலைப் போரில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களின் உருவப் படங்கள், மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் அலங்கரிக்கப்பட்டு மலர்கள் சொரிந்து அஞ்சலி செலுத்தப்பட்டன கவியரங்குகளும், மாவீரர் நினைவுச் சொற்பொழிவுகளும் நடாத்தப்பட்டு வருகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ வானொலியான புலிகளின் குரலும் மாவீரர் தின விசேட நிகழ்ச்சிகளை அளித்து வருகிறது.

மாவீரர் உருவப்படங்கள் வைக்கப்பட்ட மண்டபங்களை பெருந்திரளான மக்கள் பார்வையிட்டு அஞ்சலி செலுத்தி வருகின்றனர். மாவீரர் நினைவுக் கூட்டங்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்பிரிவினால்வட்டவைகள் தோறும் நடாத்தப்பட்டு வருகின்றன.

வடதமிழீழத்தின், கிளிநொச்சி, வன்னி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலும், தென் தமிழீழத்தின் திருமலை, மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளில், புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலும் மாவீரர் தின நிகழ்வுகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

தமிழர் தம் விடுதலைப் போரிலே முதன் முதலில் தன்னைஆகுதியாக்கிய முதல் புலிவீரன் லெப் சங்கரின் நினைவுதினமான நவம்பர் 27ந் திகதி, தமிழீழ மக்களின் உணர்வு ரீதியான பங்களிப்புகளுடன் எமது விடுதலைப் போரின் கடந்தகால சாதனைகளையும் எதிர் காலஎமது போராட்ட வளர்ச்சிகளையும் சுட்டிக் காட்டும் எழுச்சி தினமாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது.

வளர்ந்து, மலர்ந்து மணம் வீசிடும் தங்கள் வசந்தகாலங்களை தாய்மண் மீட்புக்காக ஒறுத்து விலக்கி போர்க் களமாடி வித்தாக உதிர்ந்த எங்கள் மண்ணின் நாயகர்களை தமிழினம் தலை தாழ்த்தி வணங்குகிறது.

மாவீரர் வாரத்தின் உச்ச நிகழ்வு நாளை மாவீரர் தினமாக அனுட்டிக்கப்படவுள்ளது மாவீரர் துயிலும் இல்லங்களிலும் தமிழர் தம் வீடுகளிலும், மாவீரர் நினைவுத் தீபங்கள் ஏற்றப்பட்டு மாவீரர் தினம் ஆரம்பமாகும். மாவீரர்களை பெற்றெடுத்த பெருமை மிகு பெற்றோர்கள் கௌரவிக்கப்படுவார்கள். எமது மண்ணின் விடுதலைக்காக தியாக வேள்விதனில் தம்மை ஆகுதியாக்கிக் கொண்ட எம் சகோதரர்களின் நினைவுகள் எங்கள் மனங்களில் நிலை நிறுத்தப் படும்.

''நான் சரியும் மண்ணில் நாளை
பூமலர்ந்து ஆடக் கூடும்
தேனெடுக்கும் ஈக்கள் கூட்டம்
தேடி வந்து பாடக்கூடும்
எந்த நிலை வந்து சேருமோ - அதை
இந்த விழி பார்க்க கூடுமோ''

(பாடல் புதுவை இரத்தின துரை)

என்ற கனவோடு, எங்கள் தேசம் விடியலைக் காண தம் இனிதுயிர்களை தந்திட்ட மாவீரர்கள் விட்டுச் சென்ற பணியினை, எங்கள் கரங்களில் ஏந்திக் கொள்வோமென, இந்த எழுச்சி தினத்திலே சங்கற்பம் செய்து உறுதி கொள்வோம்.

ரகுராம்

# வரதரின் கதைமலர் - ஓர் அறிமுகம்

வரதர் கதை மலர் என்ற தலைப்பில் சிறார்களுக்கான மூன்று கதை மலர்கள் அண்மையில் வெளிவந்துள்ளன. (பதினைந்து வயதுக்குட்பட்ட சிறார்களுக்கான கதை) என்ற வாசகம் இந்த வரிசையில் உள்ள ஒவ்வொரு கதை மலரின் அட்டையிலும் அழுத்தமாக இடம் பெறுகின்றது. இந்த வாசகத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளும் பக்குவம் எனக்கில்லை. மேற்சொன்ன வாசகத்திலிருந்து விலகி மூன்று கதை மலர்களையும் வாசித்ததில் பதினைந்து வயதுக்கு மேற்பட்டவர்களும் வாசிக்கக் கூடியதாகக் கதை மலர்கள் அமைந்துள்ளன.

அநு. வை. நாகராஜனின் அவன் பெரியவன், சம்பந்தனின் இராமன் கதை (இராமாயணம்), ஆங்கில மூலத்திலிருந்து சொக்கன் தமிழாக்கிய போக்கிரி முயலாரின் சாகசங்கள் என்று சிறுவர்களின் உளவயதுக்குப் பொருத்தமான மூன்று கதை மலர்கள் இந்த மூன்று கதை மலர்களும் வரதர் வெளியீடுகள். கடதாசித் தட்டுப்பாட்டுக் கஷ்டகாலத்திலும் ஒவ்வொரு கதை மலர்களும் இருபத்தெட்டுப் பக்கங்கள். ஒன்றின் விலை ரூபா பன்னிரண்டு

''இளம் சிறுவர்களிடையே வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பது ஒரு தேசியக் கடமை என்று கருதுகிறேன். சிறுவர்கள் கதைகளைத்தான் விரும்பிப் படிப்பார்கள் — இது எனது பட்டறிவு.'' என்று அவன் பெரியவன் பதிப்புரையில் வரதர் தனது நோக்கத்தைத் தொட்டிருக்கிறார். சிறுவர்களுக்காகப் பிரத்தியேகமாக இலக்கியம் செய்வது மற்ற நாடுகளில் சகஜம் தமிழ் ஈழத்தில் குறைவு. இத்துறையில் மூத்த எழுத்தாளரான வரதரின் ஆக்கபூர்வமான முயற்சி மன நிறைவு தருகிறது. பாராட்ட வேண்டியதுதான்.

## அவன் பெரியவன்

ஏலவே சிறுவர்களுக்கான நூல்களை எழுதி வெளியிட்டவர் அநு. வை. நாகராஜன் இம்முறை அவர் எழுதிய அவன் பெரியவன் என்ற கதை வரதர் வெளியீடாக வெளிவந்துள்ளது. வட மத்திய மாகாணக் காட்டுப் பகுதியிலே நடைபெறும்கதை இது குழந்தை ஹஜாவும், குட்டி யானை கஜாவும் (பெயர்கள் சிறுவர்களுக்கு அந்நியம்) ஒன்றாய் வளர்கிறார்கள். கதை முழுவதும் உள்ளூடலாக இருப்பதுமனித மிருக நேயம் என்பது பற்றித் தான். கதை நிகழும் களம் தாஸன் கதைகளை நினைவு படுத்தினாலும் சாகசங்கள் இல்லாமல் கதையை நகர்த்தக் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. பாசம் மனிதனையும் மிருகத்தையும் பாதிக்கும் தன்மை கதையில் இழையோடுகிறது சிறுவர்கள் விரித்த புத்தகத்தை மூடாமல் வரிக்கு வரி படிக்கக் கூடிய கதை.

## இராமன் கதை

— வரதர் கதை மலர் — 2

இராமன்கதை (இராமாயணம்) மூத்தஎழுத்தாளர் சம்பந்தனின் படைப்பு. 1949ஆம் ஆண்டில் எஸ். எஸ். சண்முகநாதன் அன் சன்ஸ் அச்சுவாகனம் ஏற்றி வெளியிட்ட இந்தப் புத்தகம் மூன்று பதிப்புகளைக் கண்டது மூன்று பதிப்புகளையும் வெளியிட்டவர் எஸ். எஸ். சண்முகநாதன் இப்போது சுமார் அரை நூற்றாண்டு காலத்தில் ஒக்ரோபர் 93இல் இராமன் கதை வரதர் வெளியீடாக வெளிவந்துள்ளது.

தொல்சீர் பாத்திரங்களான இராமனையும் சீதையையும் மற்றும் இலக்குவனையும் வரைந்து காட்டுவதே இந்நூல். இராமாயணக் கதையைப் பற்றிய ஐயப்பாடுகள் இருப்போருக்கு இந்நூலைப் பரிந்துரை செய்யலாம். அவ்வளவு தான். இராமாயணத்தின் வழமையான கதை மாற்றங்களைச் சித்தரிப்பதோடு நில்லாமல், ஆணாதிக்கத்தின் விளைவாக சீதை மௌன சாட்சியாகத்

(8ஆம் பக்கம் பார்க்க)

அமெரிக்க நாட்டின் டொனால்ட் டக்கும் (Donald Duck), லூயி லாமூர் (Wild West) கதைகளும் தமிழ் நாட்டில், தமிழில் வெளியாகி, இங்கு இறக்குமதி செய்யப்பட்டு பெரிய பாதகங்களை விளைவித்து வருகின்றன இந்நிலையில் எமது சிறார்களுக்குப் பயன் பொருத்தமான புதிய படைப்புகளை உருவாக்கும் முயற்சியில் வரதர் முனைந்திருப்பது விரிவுபட வேண்டும்.

மதன்

அனைத்துலகப்பெண்கள் நாளை முன்னிட்டு

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினால் நடாத்தப்படும்

## இலக்கிய, ஓவியப் போட்டிகள்

1994-03-08 இல் நிகழவிருக்கும் அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு, தமிழீழப் பெண்களுக்கான இலக்கிய, ஓவியப் போட்டிகளை நடாத்த விடுலைப் புலிகள் மகளிர் அமைப்பு முடிவு செய்துள்ளது

இலக்கியப் போட்டிகள் சிறுகதை, கவிதை என்ற இரண்டு விடயத்தின் கீழ் நடைபெறும்.

ஓவியங்களை எந்த வகை ஓவியங்களாகவும் போட்டியாளர்கள் விரும்பியபடி வரையலாம்.

போட்டிக்கான விதிமுறைகள்:-

- படைப்புக்கள் தமிழீழப் பெண்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை முன்னெடுப்பதாகவும், அவர்களின் முன்னேற்றத்தைச் சுட்டுவதாகவும் அமைய வேண்டும்
- கவிதைகள் 35 வரிக்கு மேற்படாதனவாகவும், சிறுகதைகள் 4 பக்கங்களுக்கு மேற்படாதனவாகவும் இருக்க வேண்டும். ஓவியங்கள் போட்டியாளர்கள் விரும்பும் அளவில் வரையப்படலாம்
- போட்டியாளரின் சொந்தப்பெயர், முகவரி, வயது என்பன தனியாக ஒருதாளில்எழுதப்பட்டு, படைப்புக்களுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
- கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், ''அனைத்துலகப் பெண்கள் நாள் இலக்கிய, ஓவிய போட்டிக்கான படைப்புக்கள்'' என்று குறிப்பிடப்பட வேண்டும்
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது
- போட்டி முடிவுத் திதி — 1994-01-20
- படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி;

**சுதந்திரப்பறவைகள்,**
**வெளியீட்டுப் பிரிவு,**
**விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு,**
**கோண்டாவில்.**

தமிழீழப் பெண்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்குமுகமாக நடாத்தப்படும் இவ் இலக்கிய, ஓவியப் போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு அனைத்துப் பெண்களையும் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு கேட்டுக் கொள்கின்றது

**விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு.**

(சி-7994)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
10.08.1922

மறைவு
27.10.1993

**திருமதி**
**வல்லிபுரம் செல்லம்மா**

பட்சணத்தைப் பகிர்ந்தளித்து
பட்டினியாய் தானிருந்து
அன்பை வாரிக்கொடுத்து
அனைவரையும் ஆதரித்து
கண்ணின் இமையாய்
குடும்பத்தை காத்திட்ட அம்மாவே!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

26. 11 93 வெள்ளிக்கிழமை (இன்று)எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில்கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்

மகன்மார் வ. முத்துவேல், வ,பொடிசிங்கம்
மகள் வ. ஈஸ்வரிதேவி, மருமக்கள்,
பேர்த்திகள், உறவினர்கள்.

எமது அன்புத் தாயாரின் மறைவின் போது எமது துயரில் பங்கேற்றோருக்கும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வல்லிபுரம் பொடிசிங்கம் குடும்பத்தினர்,

பொற்பதி,
குடத்தனை.

(6696)

# 'பென்டகனின்' சொத்துக்கள்;
## உலகை அழிக்கவல்ல அணு ஆயுதங்கள்!

அமெரிக்காவைப் பொறுத்தவரை அங்கு தயாராகிற அதிநவீன போர் விமானங்களையும் தளபாடங்களையும் அமெரிக்க இராணுவ தலைமையகமான பெண்டகன். பெருமைக்குரிய சொத்துகளாகக் கருதுகிறது.

தங்கள் நாட்டின் படைப்புக்கள் வளைகுடாப் போரில் எதிரிகளைச் சின்னா பின்னமாக்கியதையிட்டு அமெரிக்க படைத்தளபதிகளுக்கு ஏகபூரிப்பு. அமெரிக்க தளபதிகள் ஏவுகணையின் நுனியில் வீடியோ கமரா எடுத்து அனுப்பும் படங்களை பத்திரிகையாளர்களுக்குப் போட்டுக்காட்டி, நாள்தோறும் பெருமையுடன் விவரித்துக் கொண்டிருக்கின்றனர்

இப்போது இவற்றைவிடவும் அதிநுட்பமான போர்க் கருவிகள் அமெரிக்காவில் வடிவமைக்கப்பட்டு வருகின்றன. அடுத்த இருபது ஆண்டுகளுக்குள் அமெரிக்கா தயாரிக்கப்போகிற போர்த்தளபாடங்கள் களத்தில் இறங்கிவிடும் என்கிறார் அமெரிக்க விஞ்ஞானியான ஜோன்பைக் என்பவர்.

வளைகுடாப் போரில் சாகசம் புரிந்த எவ் 15 ரக விமானங்கள் இனி ஓரங்கட்டப்பட்டுவிடும் அவற்றுக்குப்பதிலாக தந்திர விமானங்கள் புழக்கத்திற்கு வரப்போகின்றன. இவை அந்தரத்தில் பறந்து சாதனை பல புரியும் எதிரி நாடுகளின் ரேடர் கருவிகளைக்கூட ஏமாற்றிச் சென்று தாக்குதல் தொடுக்கும் சக்திவாய்ந்தவை இவை.

பேட்ரியாட் ஏவுகணைகளைத் தொடர்ந்து E-Rint, Thaad எனப்படும் ஏவுகணைகள் வரப்போகின்றன. விர்ரென்று கிளம்பி அசுர வேகத்தில் சென்று எதிரிநாட்டு ஏவுகணைகளை அழிப்பதில் இவை வல்லவை.

அமெரிக்க இராணுவத்தில் இப்போது உள்ள ஹெலிகொப்டர்கள் தொடர்ந்தும் இருக்கும். ஆனால் அவற்றில் பல புதிய நுணுக்கங்கள் பொருத்தப்பட்டுள்ளன. ஹெலிகொப்டர் இறக்கையின் நடுவில் குமிழ் போன்ற சாதனம் உண்டு இந்த சாதனத்திலுள்ள சில நவீன கருவிகள், எதிரிகளின் முகாம்களை எந்த நேரத்திலும் கண்டுபிடித்துத் தாக்கும் தன்மையுடையன அதுமட்டுமன்றி இந்தக் கருவிகளின் உதவியால் எதிரிகளின் கண்ணில் தட்டுப்படாமல், ஹெலிகொப்டர்கள் பதுங்கவும் முடியும்.

''இதுவரை இரண்டு விதமான போர் முறைகள் இருந்தன. ஒன்று வழக்கமான போர் முறை. மற்றொன்று அணு ஆயுத போர் முறை இப்போது மூன்றாவது போர் முறை ஒன்றையும் உருவாக்கியிருக்கிறோம். அதுதான் அதிநவீன தொழில் நுட்பப் போர் முறை என்று மார் தட்டிக் கொள்கிறார் விஞ்ஞானி ஜோன்பைக்

இதுவரை போர்முனைகளில் வீரர்கள் இருந்தார்கள் இனி அவர்களுக்குப் பதிலாக நவீன இயந்திரங்கள் இருக்கும் இந்த இயந்திரங்களை நடமாடும் கட்டளை நிலையங்களிலிருந்து விஞ்ஞானிகள் இயக்குவார்கள்.

ஏவுகணை விமானங்களிலும் இப்போது பல புதிய மாற்றங்கள் செய்யப்படுகின்றன. இந்த ஏவுகணை விமானங்கள தாக்க வேண்டிய இலக்குகளைத் தாமாகவே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் தன்மையுடையவை அதுமட்டுமன்றி இவற்றை மீண்டும் மீண்டும் பயன்படுத்தலாம்

ஒவ்வொரு ஏவுகணை விமானத்திலும் சக்தி வாய்ந்த ரேடர் கருவியும் கம்யூட்டரும் பொருத்தப்படும். எதிரி நாடுகளின் முக்கியமான இலக்குகள். ராணுவ வண்டிகள், டாங்கிகள், படைப்பிரிவுகள் போன்றவற்றைப் பற்றிய தகவல்கள் முன் கூட்டியே கணனியில் பதிவு செய்யப்படும் ஏவுகணைவிமானத்தின் முனையிலிருந்து வெளிப்படுகிற கதிர் வீச்சு, தாக்க வேண்டிய இலக்கை மோப்பம் பிடித்துக் கொண்டே வரும்.

இலக்கு தென்பட்டதும் கண் இமைக்கும் நேரத்தில் அதன் வடிவமைப்பு, வலிமை ஆகியவற்றைக் கணக்கிட்டு விடும். பிறகு சரியாக அந்த இலக்கின் மீது தாக்குதல் தொடுத்துவிட்டு, அடுத்த இலக்கைத் தேடிச் செல்லும். தாக்குதல் முடிந்த பிறகு, மீண்டும் ஏவுதளத்துக்கே திரும்பி வரும்

போர்முனைகளுக்கு இனி வீரர்கள் செல்ல வேண்டியதில்லை. அவர்களது வேலை எல்லாம் பாதுகாப்பான கட்டளை நிலையங்களில் அமர்ந்து கொண்டு இத்தகைய நவீன ஆயுதங்களை இயக்குவதுதான் என்கிறார் அமெரிக்கவிஞ்ஞானி ஜோன் பைக்.

எல்லாம் சரிதான். ஆனால் போர் வீரர்கள் அழியக் கூடாது என்பது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் அப்பாவிப் பொதுமக்கள் அழியக் கூடாது என்பதும் அல்லவா? மனித உயிர்கள் விலைமதிப்பற்றவை என்பதை விஞ்ஞான உலகம் உணர்ந்து கொண்டால் சரிதான்.

## வரதரின்

தீக்குளிப்பது ஆகியன இந்தப் புத்தகத்தின் உள்ளீடு. இந்த நூலைத் தவிர்த்து வேறொரு நூலைவெளியிட்டிருக்கலாம். இருப்பினும் சம்பந்தனின் தெளிவான உரை நடை கதைக்கு நயம் தருகிறது.

பின் இணைப்பாக இந் நூலில் சொகக்னின் முயலாரும் தேநீர்ப் பாத்திரமும் என்ற குட்டிக்கதையும் இடம் பெறுகிறது.

## போக்கிரி முயலாரின் சாகசங்கள்

—எளிற்பிளைற்றனின் ஆங்கிலக் கதைகளை போக்கிரி முயலாரின் சாகசங்கள் என்ற தலைப்பில் தமிழில் சொல்லியிருக்கிறார் சொக்கன் மூலப் போக்கிலிருந்து மாறாமல் முயலார் நடத்திய ஏழு சாகசங்கள் பற்றிப கதைகள் இதில் இடம் பெறுகின்றன. சிறுவர் எதை எல்லாம் படித்திட வேண்டும் என்பதற்கு இந்தக் கதைப் புத்தகம் ஒரு உதாரணம்.

மூத்த எழுத்தாளர் பலர் ஒதுங்கிக் கொண்டிருக்கும் சிறுவர் இலக்கியத்துறையில் கல்வி உலகில் நீண்ட கால ஆசிரியப்பணி அனுபவமும் எழுத்தாற்றலுமுடைய சொக்கன் முன்வந்திருப்பது நல்ல சகுனம் என்பதை நாம் ஒப்புக் கொள்ளவேண்டும். லூபிலாமுர் எழுதியுள்ள (WILD WEST) முரட்டுக் குதிரைகளும் கௌபாய்களும் டொனால்ட் டக் (DONALD DUCK) என்ற அமெரிக்க கலாசார விஸ்தரிப்புக் கதைகளும் தமிழ் நாட்டில், தமிழில் வெளியாகி இறக்குமதியாகும் இன்றைய காலத்தில் சொக்கனின் போக்கிரி முயலாரின் சாகசங்கள் ஆரோக்கியமான முயற்சி. சிறுவர்கள் அவசியம் படிக்க வேண்டிய கதைப்புத்தகம் போக்கிரி முயலாரின் சாகசங்கள்.

பொருளாதார ரீதியான செலவினங்கள் அதிகரித்துள்ள காலத்தில் புத்தகங்களைப் பட்டியலிட்டு வெளியிட முடியாதுதான். இருந்தும் சிறுவர்களுக்கான பழைய இலக்கியம், புதிய கதைகள், விஞ்ஞானம், அரசியல் பூகோள நூல்கள் (பாடநூல்களைக் குறிப்பிடவில்லை) வெளிவர வேண்டும்.

## அறிவித்தல்

**யாழ் மாநகரசபை - பொது நூலகம்**
**பழைய சஞ்சிகைகள் பகிரங்க ஏல விற்பனை**

வாசகர்களின் பாவனைக்கு மட்டும் உரித்தான (பழைய பேப்பர் பாவனைக்கல்லாத) பழைய சஞ்சிகைகள் 18 - 12 - 93 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நல்லூர் பிரதான நூலகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். கேள்வியில் சித்திபெறுபவர்கள் உடன் உரிய கேள்வித் தொகைகளைச் செலுத்தி சஞ்சிகைகளைக் கொண்டு செல்லவேண்டும். விற்பனைக்குரிய சஞ்சிகைகளின் பட்டியல்களை சகல மாநகரசபை நூலகக் கிளைகளிலும் இன்று முதல் பார்வையிடமுடியும்.

**மாநகர ஆணையாளர்,**
யாழ். மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
25-11-1993

(சி-7997)

## அறிவித்தல்

நவம்பர் 27 மாவீரரை நினைவுகூரும் நன்னாளில் எமது கிளை நிலையங்களில் கொள்வனவு நடவடிக்கையைமட்டும் நடைமுறைப்படுத்திக்கொண்டு தங்கள் பிரதேசங்களில் நடைபெறும் மாவீரர்களின் நினைவு நாள் வைபவங்களில் அனைவரும் உள உணர்வுடன் கலந்துகொண்டு அவர்களின் கனவுகளை நனவாக்குவதற்கு உறுதிகொள்வோம்.

தலைவர்,
**வடமாகாண தெ. ப. பொ. கூ. ச.**
**சமாசம்.**

(சி-7998)

# பூநகரி தோல்விக்கு பொறுப்பு ஏற்பது யார்? ஐ. தே. க. அரசாங்கம் நழுவப் பார்க்கின்றது

பூநகரி - நாகதேவன்துறை படைத்தள வீழ்ச்சிக்குப் பொறுப்பு ஏற்பது யார்? இன்று சிறிலங்காவில் பிரதான கேள்வியும் சர்ச்சைக்குரிய விடயமாகவும் இதுவே உள்ளது. ''பூநகரி விவகாரத்திற்கு யார் மீதும் பொறுப்பு விழவேண்டும் எனப்பலர் விரும்புகின்றனர். ஆனால் யாரும்பதவி விலக மாட்டார்கள் என்பதைப் பழைய அனுபவங்கள் காட்டுகின்றன.'' இது இன்று தென்னிலங்கையில் நிலவும் இச் சர்ச்சை குறித்து பி.பி.ஸியின்கொழும்புச் செய்தியாளரின் விமர்சனம்.

சிறிலங்கா இராணுவமும், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும், இதற்கு முன்னரும் பல இராணுவத் தோல்விகளைச் சந்தித்தவைதான். ஆனால் அப்பொழுது பரஸ்பரம் ஒருவரை ஒருவர் காப்பாற்றிக்கொண்டனர் என்றே கூறவேண்டும். பூநகரி-நாகதேவன்துறை படைத்தளம் தகர்ப்பின் முன்னரும், அதாவது, 'ஒப்பரேசன் யாழ்தேவி' நடவடிக்கையின் போதும்இராணுவம் ஒரு வரலாற்றுத் தோல்வியைச் சந்தித்ததுஆயினும்அரசாங்கமும் இராணுவமும் இணைந்து அதனை மூடிமறைக்கமுயன்றன. அதனை மீறி விமர்சனம் செய்ய முற்பட்டோரை மிரட்டிப்பணிய வைக்க முயன்றன என்றுகூடக் கூறலாம்.

ஆனால், பூநகரியில் ஏற்பட்ட தோல்வியும் இழப்பும் இருதரப்பும் மூடி மறைக்க கூடியதாகவோ அன்றி மறைத்துவிடக் கூடியதாகவோ இல்லை. அந்தளவிற்குஇழப்பு பெரியதாகவும்,மூடிமறைத்துவிட முடியாத அளவினதாகவும் உள்ளது. அத்தோடு இவ் இழப்பானது சிங்களவர் மத்தியில் அரசாங்கம் மீதும், இராணுவத்தின் மீதும் பெரும் அவ நம்பிக்கையை ஏற்படுத்தியதாகவும் இருந்தது. இந்நிலையில் பூநகரியில் ஏற்பட்ட தோல்விக்கு யார் பொறுப்பு ஏற்கின்றார்களோ அவர்கள் அரசியலிலும், மற்றும் பொறுப்புக்கள், பதவிகள்என்பனவற்றில் பெரும் பின்னடைவுகளைச் சந்திக்க வேண்டி வரும். இதன் காரணமாகவே பூநகரியில் ஏற்பட்ட தோல்வியில் இராணுவத்துடன் முன்னர்போல் தோள் கொடுக்க அரசாங்கம் தீவிரமாக முனைந்துநிற்கவில்லை என்று கூறலாம்.

இந்நிலையில், தோல்விக்கான பொறுப்பை யாராவது ஏற்க வேண்டும் என்பதில் அக்கறை காட்டும் அனைவரும் தோல்விக்கான தமது பங்கை மறைத்து விடவே விரும்புகின்றனர். ஆனால் பொதுவாகக் குற்றச்சாட்டுக்கள் சிறிலங்காவின் இராணுவத்தலைமை, ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம், யுத்தப் புலனாய்வுத்துறை எனபவற்றின் மீது தனியாகவும் கூட்டாகவும் முன்வைக்கப்பட்டுள்ளன.

வழமை போலவே எதிர்க்கட்சியினர் பூநகரியில் ஏற்பட்ட தோல்விக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் நிலையில்லாத கொள்கையும்,பொறுப்பின்மையுமே முக்கிய காரணம் என சாடியுள்ளன. பூநகரி தோல்வி குறித்துப் பாராளுமன்றத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா பாதுகாப்பிற்கென ஒரு அமைச்சர் இல்லாமையே இன்றைய நிலைக்குக் காரணமாகும்'' எனக் குற்றம் சாட்டினார்.

இதேவேளை, அரசாங்கம் மீது குற்றம் சாட்டும் வேகம் இல்லாது விடினும் இராணுவத்தினர் மீதும் புலனாய்வுத் துறையினரின் மீதும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டாமல் இல்லை. இது ஒருவகையில் இதுவரை இல்லாத நிலைப்பாடுதான். ''வடக்கு-கிழக்கு யுத்த நிலை குறித்து உளவுப்பிரிவு சரியாக இயங்கவில்லை. யுத்தம் குறித்த தகவல்கள் மதிப்பீடுகள் சரியாக அரசிடம் இல்லை'' என உளவுப்பிரிவின் செயற்பாட்டைப் பற்றிக் குறை கூறிய எதிர்க்கட்சி உறுப்பினர் கேணல் அநுருத்த ரத்வத்த ''பூநகரி முகாம் பகுதி தனக்கு நன்கு தெரியும் அப்பகுதி இராணுவம் முகாம் அமைப்பதற்குத் தெரிவு செய்யக்கூடிய பகுதி அல்ல'' என இராணுவத் தலைமையின் இராணுவ அறிவு சம்பந்தமாகவும் சந்தேகத்தை எழுப்பினார்.

இதேவேளை இராணுவத்தினரின் தேவைகள் அரசால் நிவர்த்திசெய்யப்படவில்லை. போரிடுவதற்கான வசதிகள் இராணுவத்தினருக்குச் செய்து கொடுக்கப்படவில்லை என்றும் எதிர்க்கட்சிகள் குறைகூறத்தவறவில்லை. ''விடுதலைப்புலிகளை எதிர்த்துப் போரிட படையினருக்குப் போதிய வசதிகள் இல்லை. நுளம்பை விரட்டக்கூட அவர்களுக்கு நுளம்புத்திரி வழங்கப்படுவதில்லை'' என பாராளுமன்றத்தில் சுதந்திரக்கட்சி எம். பி. நெவில் பெர்னாண்டோ வியாக்கியானம் செய்தார்.

அரசாங்கம் மீதான எதிர்க்கட்சிகளின் இக் குற்றச்சாட்டுக்கள் வழமையானவை என்றாலும், கடந்த காலத்தைப் போன்று அரசாங்கத்தினால் இக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்தோ, அன்றி எடுத்தெறிந்தோபேசக்கூடிய நிலை இம்முறை இருக்கவில்லை. பதில் அளித்து ஆக வேண்டும் அல்லாதுபோனால் பழியைவேறுயாராவது தலையில் கட்டிவிட்டுதப்பித்துக் கொள்ள வேண்டும் என்ற நிலையே அரசாங்கத்திற்கு உள்ளது.

இருப்பினும் ஆரம்பத்தில் இராணுவத்தை பாதுகாக்கும் முயற்சியிலேயே ஐ. தே. கட்சி அரசாங்கம் ஈடுபட்டது. எடுத்துக்காட்டாக பூநகரி முகாம் வீழ்ச்சி கண்டு சில தினங்களின் பின் ஐக்கிய தேசியக்கட்சி செயற்குழு கூட்டத்தில் பேசிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா 'இது ஒரு முக்கியமான கட்டம் நாம் அனைவரும் இராணுவத்தை விமரிசிக்கக் கூடாது. நாம் ஒன்றுபட்டு இராணுவத்தை ஊக்குவிக்க வேண்டும். யாவரும் பதற்றமடையக் கூடாது. அரசாங்கத்தை திட்டுவதை நிறுத்திவிட்டு இராணுவத்தை ஊக்குவிக்க வேண்டும்' எனக் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால் பூநகரி முகாம் வீழ்ச்சியின் அதிர்வலைகள் பெரிதாகக் கேட்கத் தொடங்கியதும் பிரதமர் தனது நிலைப்பாட்டைச் சற்றுமாற்றிக் கொண்டார்.

அதாவது சுமார் ஒரு வாரத்தின் முன் இராணுவத்திற்கு சார்பாகப் பேசிய பிரதமர் ரணில் இரு தினங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் பூநகரி தாக்குதல் பற்றி அறிக்கை சமர்ப்பித்துப் பேசியபோது உளவுத்துறையை ஓரளவு காப்பாற்ற முற்பட்டார். ஆனாலும் இராணுவத் தரப்பிற்கு அவர் முட்டுக்கொடுக்க வெளிப்படையாக முயற்சிக்கவில்லை. இவ் அறிக்கையில், 'தாக்குதல் நடைபெறுமென பூநகரி இராணுவ முகாமிற்குப் போதிய தகவல்கள் கிடைத்திருந்தன. இருப்பினும் அதன் பின்னரே முகாம் மீது தாக்குதல் நடந்திருக்கின்றது' என்பதும் 'பூநகரி முகாம் தாக்கப்பட்டு 72 மணி நேரத்திற்குப் பின்னரே மீட்பு அணி அங்கு சென்றுள்ளது. இவ்வளவு கால நேரம் எடுத்ததற்கான காரணம்பற்றியும் விசாரிக்கப்படும்.' என்பதும் போன்ற பிரதமரின் அறிவிப்பானது இராணுவத்தினரிடமே இதற்கான அதாவது தோல்விக்கான பொறுப்பை விட்டுவிட அரசாங்கம் முனைந்திருப்பதையே காட்டுகின்றது என அபிப்பிராயப்பட இடமுண்டு.

இதேவேளை, சில அரசு தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களே வழமைக்கு மாறாக இராணுவத் தலைமையை காட்டமாகச் சாடியதும் உண்டு. ''யுத்தத்தை நடத்துவதற்கு இராணுவத் தளபதிஒருவரை நாம் நியமித்துள்ளோம். அவருக்கு அதற்கான அதிகாரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இராணுவத்தளபதியால்உரிய முறையில் பணியை நிறைவேற்ற முடியாது விட்டால் புதிய தளபதி ஒருவரை நியமித்து யுத்தத்தை நாம் தொடர்ந்து நடத்துவோம்'' என்ற இராணுவத் தலைமை மீதான அரசாங்ககட்சி உறுப்பினர் மதுருபால எதிரிவீரவின் சாடலானது இதற்கொரு எடுத்துக்காட்டாகும்.

இந்த வகையில் இராணுவமே தோல்விக்கான பதில் சொல்ல வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இதனை இராணுவத் தலைமையும் உணர்ந்துவிட்டது போன்றே உள்ளது. ஏனைய இராணுவத் தோல்விகளின் போது அவற்றைத் தோல்வி என ஏற்றுக் கொள்ளாது எடுத்தெறிந்து பேசி வந்த இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா சற்று அடக்கமாகப் பேசுவது இதையே காட்டுகின்றது. அதாவது 'பூநகரிப் படைத்தளத்தில் என்ன நடந்தது என்பதை முழுமையான விசாரணையின் பின்பே கூற முடியும்' என்ற இராணுவத் தளபதியின் கூற்றானது அவர் பலவீனமான நிலையில் உள்ளார் என்பதை உணர்த்துவதாகவேஉள்ளது

இவ்வாறாக இராணுவத் தளபதி இம்முறை அதட்டவோ, மிரட்டவோ முடியாததிற்குக் காரணம் மறைக்க முடியாத தோல்வியின் அளவே ஆகும். ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை இராணுவத்திற்குத் தோல்வியைத் தேடிக் கொடுத்தது ஆனாலும், களத்தில் புலிகளிடம் தோல்வி கண்டவர்கள் இராணுவத்தினர் ஆகும். அதாவது பூநகரியில்ஏற்பட்ட தோல்வியானது அரசின் இராணுவ ரீதியான கொள்கைக்கும், போராட்டக்களத்தில் இராணுவத்தினருக்கும்கிடைத்த தோல்வியும் ஆகும். ஆனால் அரசாங்கம் தோல்வியை மறைக்க முயல்வது போல் தனது தோல்வியை இராணுவத்தால் மறைத்துப் பேச முடியாது உள்ளது'

ஆனால், இது உண்மையில் தனித்தனியாக சிறிலங்கா ராணுவத்திற்கே அன்றி உளவுத் துறையினருக்கோ அன்றி ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கோ கிடைத்த தோல்வி எனக் கூறிவிட முடியாது. ஒட்டுமொத்தமாக இவர்கள் அனைவர்க்கும் கிடைத்த தோல்வியாகும் சுருக்கமாகக் கூறின் அரசாங்கம், இராணுவம், உளவுத்துறை என சகலதையும் உள்ளடக்கிய சிறிலங்கா அரசிற்குக் கிடைத்த தோல்வியே ஆகும்.

ஏனெனில் இனப் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வுதான் என்ற முடிவில், அரசாங்க கட்சியிடமோ,அன்றி எதிர்க்கட்சியிடமோ, இராணுவத் தரப்பிலோ, அன்றிப் புலனாய்வுப் பகுதியிலோ பெருங் கருத்துவேறுபாடு கொண்டு இருப்பதாக இல்லை.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக ஆட்சிப்பொறுப்பில் இருக்கும் ஐ.தே.கட்சி ஆரம்பம் முதலே இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு என்ற ரீதியிலேயே செயற்பட்டு வந்தது, ஆனால் தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேய துங்காவிற்கு முன்னிருந்த ஜனாதிபதிகளான, ஜே.ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாசா போன்றோர் இடைக்கிடை அரசியல் தீர்வு பற்றி பேசினர். வெளி உலகிற்குக் காட்டிக்கொள்ளவென சர்வகட்சி மாநாடு எனவும், தெரிவுக்குழு எனவும் சில நடவடிக்கைகளையும் எடுத்தனர்.

இருப்பினும் இராணுவம் பெரும் நிதி ஒதுக்கீட்டைப் பெற்று விரைவாக வளர்ந்து கொண்டு வந்தது. ஜனாதிபதி பிரேமதாசா காலத்தில் இராணுவ நிதி ஒதுக்கீடு 800 கோடி ரூபாவிலிருந்து 2500 கோடி ரூபாவரையில் சென்றது. சுமார் 45,000 ஆக இருந்த இராணுவத்தின் எண்ணிக்கை 90,000 ஆக உயர்ந்தது. அதாவது இராணுவம் ஒரு முனைப்புபெற்ற சக்தியாக தங்கு தடையின்றி வளர்ந்து வந்தது இறுதியில் அரசியலில் ஆதிக்கம் செய்யும் அளவில் அதன் வளர்ச்சி இருந்தது.

ஆனால்,முன்னாள் ஜனாதிபதிகள் அரசியல் தீர்வு பற்றிப் பேசிக் கொண்டமையானது இனப்பிரச்சினை விடயத்தில் தெளிவான கொள்கைகளை கொண்டிருக்கவில்லை எனக் குறை கூறப்பட்டது. அதாவது, இனப்பிரச்சினைக்கு அரசாங்கத்திடம் தெளிவான கொள்கை இல்லை எனவும் தளம்பல் போக்கு காணப்படுவதாகவும் விமரிசிக்கப்பட்டது.

இருப்பினும், டி. பி. விஜேதுங்க சிறிலங்கா ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்னர் இவ்வாறான குறை காணலுக்கான நிலை முற்றாக நீக்கப்பட்டதெனலாம்.இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரே தீர்வு என அவர் தெளிவாக அறிவித்தார். அதற்கேற்ப இராணுவத்திற்கான நிதி ஒதுக்கீடும் கணிசமான அளவு அதிகரிக்கப்பட்டுள்ளதோடு, இராணுவத்தினரின் எண்ணிக்கையும் பெருக்கிக் கொள்ளவும், நவீன தளபாடங்களைப் பெற்றுக் கொள்ளவும் அனுமதியும் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தவகையில் டி.பி. விஜேதுங்க காலத்தில் இராணுவம் மேலும் புத்துயிர்ப்புப் பெற்றதோடு, இராணுவத்திற்கு நேர்வழிகாட்டப்பட்டதெனவும் கூறலாம். இதனைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகளுக்கு எதிரான பெரும் தாக்குதல் திட்டங்களை வகுப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும், இராணுவத்தலைமையும் முனைப்பாகச் செயற்படத் தொடங்கியது. இதன் அடிப்படையில் ஒப்பரேசன் யாழ்தேவி மூலம் விடுதலைப்புலிகளை ஒரு முற்றுகைக்கு உள்ளாக்க இராணுவம் முயற்சித்தது. விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்துவதெனக் கூறிக்கொண்டு விமானத் தாக்குதல்கள் வடபகுதியில் முடுக்கியும் விட்டது.

சிறிலங்கா புலனாய்வுத் துறையும் யுத்தத்திற்கான தகவல்களை வழங்குவதிலும் முகாம்களின் பாதுகாப்பு நடவடிக்கையிலும் முழுமையாக செயற்பட்டது. இதில் புலனாய்வுத்துறை கூறியது எது உண்மை, பொய் என்பதை வேறுபடுத்த முடியாது விட்டாலும் புலிகளின் நடவடிக்கைகள்பற்றி தொடர்ச்சியாக அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்கும் எச்சரிக்கைகள் விடுத்தவண்ணமே இருந்தது.

இவற்றோடு பிரதான எதிர்க்கட்சிகள் கூட யுத்தத்தை நிறுத்தவேண்டும் என்றோ, இராணுவத்தீர்வு என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டையோ குறை கூறவில்லை. போரில் விரைவாக வெற்றி பெறவேண்டும் என வற்புறுத்துவதிலேயே அவையும் குறியாக இருந்தன இதற்கு எடுத்துக்காட்டாக பூநகரி தோல்வியைப்பற்றிப் பேசிய எந்த எதிர்க்கட்சி உறுப்பினரும் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகப் போவதில்லை என்பதும் குறித்துப் பேசியதாக இல்லை. இராணுவத்தினரின் வசதிக் குறைவுகள் பற்றியும், இராணுவ நிதி ஒதுக்கீட்டுப் பற்றாக்குறை பற்றியுமே பேசியுள்ளனர்.

இந்நிலையில், இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முற்பட்டு, அதில் தோல்விகளைச் சந்திக்கும் போது அதற்குத் தனியாக ஒருவரையோ, அன்றி ஒரு பிரிவையோ குறை காணமுடியாது. ஏனெனில், சிறிலங்கா அரசின் கோட்பாடாகவே இராணுவத்தீர்வு மாறிவிட்ட நிலையில், தோல்விக்கான பொறுப்பைத் தனியாக ஒருவரோ, ஒரு பிரிவோ ஏற்கவோ அன்றிச் சுமக்கவோ முடியாது போரைத் தொடுத்தவர்கள், போரை ஊக்குவித்தவர்கள், போரை வழி நடத்தியவர்கள் எனச் சகலருமே தோல்விக்கான பொறுப்பை ஏற்க வேண்டும்.

ஜெயராஜ்

# கல்முனைக் கடலில் பீரங்கித் தாக்கு; இரு மீனவர்கள் பலி; ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கல்முனைக் கடலில் நேற்று அதிகாலை சிறிலங்கா கடற்படையினரின் பீரங்கி வேட்டிற்கு இலககாகி இரு மீனவர்கள் பலியாகியுள்ளனர். ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

யாழ். குடாநாட்டு மீனவர்கள் கல்முனைக் கடலில் நேற்று காலை 5.00மணியளவில் தொழில் செய்து கொண்டிருக்கும்போது சிறிலங்கா கடற்படையினரின் விசைப் படகில் வந்தவர்கள் மீனவர்களை நோக்கி சரமாரியாக தீர்க்கப்பட்ட பீரங்கி வேட்டுக்களால்நாவாந்துறையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான லுக்கேஸ் யேசுதாஸ் (வயது 36), ஏழு பிள்ளைகளின் தந்தையான மலக்கியாஸ் தேவதாஸ் (வயது 38) என்பவர் களே மரணமானவர்கள் ஆவர். இவர்களுடன் கூட தொழிலில் ஈடுபட்டிருந்த மலக்கியாஸ் தேவதாஸ் என்பவரது சகோதரன் மலக்கியாஸ் குலம் (வயது 22) என்பவர் கையில் படுகாயமடைந்த நிலையில் வலைகள், வள்ளங்களை கைவிட்டு நீந்திக்கரைக்கு வந்து சேர்ந்தார். இவர் உடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி பீரங்கி வேட்டைத் தொடர்ந்து அந்த கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த ஏனைய மீனவர்கள் தமது பெறுமதியான வலைகளில் ஒரு பகுதிகளை கடலில் வெட்டிவிட்டு ஒரு பகுதி வலைகளுடன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு கரைக்கு வந்து சேர்ந்துள்ளனர். மேற்படி தாக்குதலை மேற்கொண்ட பீரங்கிப் படகு வெட்டுக் காட்டுப் பகுதியில் இருந்தே இப்பகுதிக்கு வந்து தாக்குதலை மேற்கொண்டதாகவும் தாக்குதல் முடிந்ததும் வெட்டுக்காட்டுப் பகுதிக்கே திரும்பிச் சென்றதை காணக்கூடியதாக இருந்ததாகவும் மீனவர்கள் தெரிவித்தனர். (88)

# தி.மு.க. செயற்குழு கருணாநிதிக்கு ஆதரவு!

(சென்னை)

வை. கோபால்சாமியையும் அவரது ஆதரவாளர்களையும் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வெளியேற்றியனத ஆதரித்து இக்கட்சியின் செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

செயற்குழு உறுப்பினர்களில் 178பேரில் 138பேர் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டதாகக் கட்சியின் தலைவர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

கட்சியின் செயற்குழுக் கூட்டம் நேற்றுச் சேலத்தில் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவளிக்க விரும்பவில்லை என்று இந்தக் கட்சியின் செயற்குழு நிறைவேற்றியஒருதீர்மானம் கூறுகின்றது.

சேலத்தில் நேற்று நடைபெற்ற இக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கையிலுள்ள தமிழர்களின் நலன்களைப் பாதுகாக்க இந்திய அரசு உடனடியாகத் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் செயற்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## தாண்டிக்குளத்தில் புலிகள்-இராணுவம்மோதல்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள தாண்டிக்குளப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுத் திடீரென மோதல் நடைபெற்றது.

இம்மோதலின்போது இருதரப்பினருக்குமிடையில்குறிப்பிட்ட நேரம்வரை கடுமையான துப்பாக்கிச் சமர் நடைபெற்றதாக நேற்று மாலை அங்கிருந்து எமக்குக்கிடைத்த தகவல் தெரிவிக்கின்றது. எனினும் இம்மோதலினபோது ஏற்பட்ட சேத விபரங்களை நேற்று நள்ளிரவு வரை பெற்றுக்கொள்ள முடியவில்லை. (க) (நி)

## வலி-வடக்கு பகுதியில் இரவுநேர குண்டுவீச்சு

(மல்லாகம்)

நேற்று இரவு 9 மணியளவில் தெல்லிப்பழை மல்லாகம் ஆகிய பகுதிகளை வட்டமிட்ட புக்காரா விமானம் ஒன்று குப்பிளான் பகுதியை நோக்கி இரு குண்டுகளை வீசியது. இதனை அடுத்து தெல்லிப்பழையில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் பலத்த எறிகணைத் தாக்குதலையும் மேற் கொண்டனர். இவ் எறிகணைத்தாக்குதல் நடைபெற்ற வேளையில் உலங்குவானூர்தி ஒன்று அப் பகுதியை நோக்கி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. இதனால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்பட்டதாக தெரியவரவில்லை. (09),(11)

## பல்கலை. விரிவுரைகளை ஒத்திவைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஒன்றியம் நேற்று யாழ் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடாத்திய கலந்துரையாடலின் முடிவில் வெட்டுப்புள்ளி தொடர்பாக பல்கலைக்கழக வட்டாரங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் பெறுபேறுகள் கிடைக்கும் வரையாவது 1992/ 93கல்வியாண்டுக்கான புகுமுக மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பிப்பதை ஒத்திப்போடுமாறு பல்கலைக்கழக உபவேந்தரையும் பீடாதிபதியையும் கோருவதாக முடிவெடுத்துள்ளனர்.

மேற்படி கோருவதற்கான மகஜரில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பலர் கையொப்பமிட்டுள்ளனர்.

### மாவீரரின்

றோர் இன்று நள்ளிரவு நடைபெறவிருக்கும் சுடரேற்றல் நிகழ்வுக்கென மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

இம் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வுகள் பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன.

**வலிகாமக் கோட்டம்.**

யாழ்- வட்டம் - வைத்தீஸ்வராக்கல்லூரி, சங்கானை வட்டம் - யாழ்ப்பாணக் கல்லூரி, சண்டிலிப்பாய் வட்டம் - மானிப்பாய் மெமோரியல் கல்லூரி, உடுவில் வட்டம் - ஸ்கந்தா கல்லூரி, கோப்பாய் வட்டம் - ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, நல்லூர் வட்டம் - கனகரத்தினம் மகா வித்தியாலயம், கடற்புலிகள் வட்டம் - சென் ஜோன்ஸ் கல்லூரி.

**வடமராட்சிக்கோட்டம்.**

கரவெட்டி வட்டம் - விக்கினேஸ்வரா வித்தியாலயம், உடுப்பிட்டி வட்டம் - துன்னாலை ஞானசாரியார் வித்தி, பருத்தித்துறை வட்டம் - புட்டளை ம. வித்தியாலயம், பருத்தித்துறை (கடற்புலி) வட்டம் - வட இந்து மகளிர் கல்லூரி, கடற்புலிகள் - தும்பளைசிவப் பிரகாச வித்தியாலயம்.

**தென்மராட்சிக் கோட்டம்.**

கைதடி வட்டம் - முத்துக் குமாரசாமி மகா. வித்தி, சாவகச்சேரி வட்டம் - மீசாலை விக்கினேஸ்வரா வித்தி, கொடிகாமம் வட்டம் - பளை, உசன் இந்து மகா வித்தியாலயம்.

**தீவகக் கோட்டம்-திருமலை.**

யாழ். இந்து மகளிர் கல்லூரி.

### நள்ளிரவு

டங்களும் கோட்ட ரீதியாக நடைபெற உள்ளன

இதேவேளை இன்று மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெறும்.

## யுத்தத்தை வெல்ல தமிழர் மனங்களை வெல்ல வேண்டும் - சிறிமாவோ

(கொழும்பு)

யுத்தத்தை வெல்வதானால் வடபகுதி மக்களின் மனங்களை வெல்ல வேண்டியது முக்கியம் என சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அவர் உரையாற்றும்போது; இவ் யுத்தம் ஒழியக்கூடிய ஒன்றல்ல நாட்டில் இனப்பிரச்சினை என்ற ஒன்றில்லை என ஜனாதிபதி கூறுகிறார் இதைக்கேட்டு தமிழ் மக்கள் ஆச்சரியமடைகின்றனர் முழு உலகமும் இனப்பிரச்சினை உண்டு என சொல்கிறது ஜனாதிபதி அதனை ஏற்கவில்லை.

டென்சில்கொப்பேகடுவ போன்றவர்கள் யுத்தகளத்திலிருந்து போராடினர். ஆனால்இன்றைய ராணுவத் தலைமை பலாலியிலிருந்து கொண்டு யுத்தம் நடாத்தும் போது கொழும்பிலிருந்து கொண்டு ஏன் யுத்தம் பற்றி கதைக்க முடியாது? என அவர் வினாவினார்.

## கிளாலியில் ஹெலிதாக்கு!

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கடற்பரப்பில் பயணிகள் போக்குவரத்துப் படகுகள் மீது சிறிலங்கா விமானப்படையினர் தாக்குதல் நடாத்தியுள்ளனர். விமானப் படையினரால் உலங்குவானூர்தியிலிருந்து படகுகளை நோக்கிச் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று நள்ளிரவு நடைபெற்ற இத் தாக்குதலினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் கிடைக்கவில்லை.

### மாவீரர்

அம்மன் கோவிலடியிலும், ஃ தென்மராட்சிக் கோட்டத்தில் மட்டுவில் மகா வித்தியாலயத்திலும் இடம்பெறவுள்ளன.

### இன்று கொழும்பில்

கப்படுகிறது.

மேலும் ஜனாதிபதி, பிரதமர் போன்றவர்களுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப் பட்டுள்ளதால் விடுதலைப் புலிகள் எதிர்க் கட்சித் தலைவர்களுக்குக் குறிவைக்கலாம் என்றும், இதற்காக அரசியல் வாதிகளுக்கும் பாதுகாப்புத்தர அரசு மேலதிக நிதி ஒதுக்கீடு செய்யும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்



**கந்தசாமி யோகநாதன்**

(வழக்கறிஞர்)

வழக்கறிஞர் கந்தசாமி யோகநாதன் 17-11-93 அன்று கனடாவில் காலமானார். அன்னார் மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சிவகுரு கந்தசாமி ஆசிரியர்-காலம்சென்ற கதிராசிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், கருகம்பனை-கீரிமலையைச் சேர்ந்த சிற்றம்பலம் தம்பதிகளின் மருமகனும் இந்திராவின் (பொட்ஸ்வானா)அன்புக் கணவரும், காலம்சென்ற இராகுலன், யசோதரா (பொட்ஸ்வானா), இராகவன் (பொட்ஸ்வானா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கதிர்காமநாதன் (கனடா), புனிதவதி, கமலநாதன் (இங்கிலாந்து), தேவகி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

செ. புனிதவதி (சகோதரி)

மட்டுவில் வடக்கு. (6697)

## ஐந்தாம் ஆண்டு வீர அஞ்சலி

**லெப். சூரியகுமார் (சூரி)**

| பிறப்பு | வீரச்சாவு |
| --- | --- |
| 31-03-1965 | 26-11-1988 |

யாழ்ப்பாணம் காரைநகர் வாசியும், முன்னாள் முறிகண்டியான் வைத்தியசாலை ஸ்தாபகரும் காலஞ்சென்ற டாக்டர் கணபதிப்பிள்ளை அவர்களின் அன்புப் பேரனும், மகாலிங்கசூரியர் கனகேஸ்வரி அவர்களின் சிரேஷ்ட புதல்வனும், வீரவேங்கையுமாகிய

**லெப். சூரியகுமார் (சூரி)**

காரைநகரில் இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார். இவருக்கு எங்கள் வீர அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

- குடும்பத்தினர்

சூரியர்வளவு,
தங்கோடை, காரைநகர். (6706)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது